http://kalviamuthu.blogspot.com

ச. நாகராஜன்



http://kalviamuthu.blogspot.com

# அறிவியல் அதிசயங்கள்

(பாகம் 3)

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | அறிவியல் அதிசயங்கள் (பாகம் – 3) |
| ஆசிரியர் | : | ச.நாகராஜன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |
| பதிப்பு எண் | : | 2.0W |
| காலம் | : | ஜூன் 2013 |
| அட்டை வடிவமைப்பு | : | ரிஷி கார்த்திக் |
| Wrapper image courtesy | : | dream designs |
| | | freedigitalphotos.net |

http://kalviamuthu.blogspot.com

**“உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்”**

**Nilacharal Ltd**
**18 Collingwood Road**
**Crawley**
**RH10 7WG**
**UK**
**E-mail: team@nilacharal.com**

## TERMS OF USE:

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

******

## உபயோக நிபந்தனைகள் :

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

http://kalviamuthu.blogspot.com

******

# பொருளடக்கம்


நீங்களும் படைப்பாளி ஆகலாம்!.......1
இசை கேட்டால் அறிவு வளரும்.......3
குழந்தைகளும் 'யோசனை' கூறலாம்.......5
குழந்தைகளின் அறிவுத்திறன்.......7
அறிவு வளர குழந்தைகளுடன் பேசுங்கள்.......9
குட்டிக் குழந்தைகள் பேசுகின்றன... .......10
உங்கள் குழந்தைகளை சாதனையாளர் ஆக்குவது எப்படி?.......11
ஜாக்கிரதை! வருகிறது ந்யூரோ மார்க்கடிங்!.......12
அறிவியல் அலசலில் 'காதல்'.......14
கர்ப்பம், பிரசவம் இல்லாமல் குழந்தை!.......18
இதோ கருத்தடைப் பட்டை! இனி வேண்டாமே மாத்திரைகள்!!.......20
மார்பகப் புற்றுநோய் இனி பயமில்லை... .......21
மார்பகத்தை பாதுகாக்க டிப்ஸ்.......22
மொபைல் போன்.......24
வேண்டாமே சிசேரியன்!.......25
ஏ டு இஸட் - உங்கள் கணவரை அலசுங்கள்.......26
உடல் பேசும் மொழி.......28
நூறு வரும் வாழும் சூப்பர் மனிதன்!.......30
ஹிட்லரின் சங்கேத மெஷின்!.......31
ஹிட்லரின் தங்கப் புதையல்!.......32
ஷீபா ராணியைத் தேடி... .......35
விந்தை மனிதர் செஷைர்.......37
கில்லடின் கதை.......39
உலகின் முதல் அணுகுண்டைப் போட்டவர்!.......41
வினாடிகளுக்குப் பின்னர் குண்டு வெடித்தது.......43
கல் வட்டம்.......44
கல்மரங்கள்.......45
உலகிலேயே தன்னந்தனியான சின்னத்தீவு.......47
மான் வடிவத்தில் ஒரு தோட்டம்!.......49
பயோமெட்ரிக் பாஸ்போர்ட்!.......50
கான்சர் நோய்க்கு ஒலி சிகிச்சை.......51
நோய் தீர்க்கும் காந்தசக்தி!.......52
சேற்றைப் பூசினால் பொலிவு கூடும்!.......53
மனிதனுக்குப் பன்றியின் உறுப்புகள்!.......55
ஆர்டர் கொடுத்தால் உங்கள் குரூப் ரத்தம் தயார்!.......56
ஆக்சிஜன் குளியல்.......57
விஷமே வியாதிக்கு நிவாரணம்.......58
கிரீனிச்.......59
உப்பு உயிரைக் குடிக்கும்!.......61
சாக்லெட், சாக்லெட்!.......63


http://kalviamuthu.blogspot.com

# நீங்களும் படைப்பாளி ஆகலாம்!

**அமாபிலின் அறிவுரை**

“எதையேனும் புதிதாகச் செய்ய வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு; ஆனால் என்ன செய்வது என்று தான் தெரியவில்லை!”

இன்றைய இளைஞர்கள் - சாதனை படைக்க விரும்புவோர் அடிக்கடி கூறுவது மேலே கண்ட சொற்கள்! ப்ராண்டி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த (Brandeis University) உளவியல் நிபுணரான டாக்டர் தெரிஸா அமாபில் (Dr. Teresa Amabile) நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி. அவரிடம் ஒருவர், “படைப்பாற்றல் உள்ள விஞ்ஞானிக்கும் அது இல்லாத விஞ்ஞானிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?” என்று கேட்டார்.

அதற்கு மிக சுலபமாக பதில் கூறினார் அமாபில் . “உழைப்பின் மீது தீராக் காதலே வித்தியாசம்” என்றார் அவர்! வெற்றி பெற்று புதியவனவற்றைப் படைக்கும் விஞ்ஞானிகள் தங்கள் உழைப்பின் மீது அடங்காத பற்றும் ஆர்வமும், ஏன், வெறியும் கொண்டிருக்கின்றனர்!

நீங்கள் படைப்பாளி ஆக வேண்டுமா?

http://kalviamuthu.blogspot.com

சாதனை புரியத் துடிக்கும் இளைஞர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் மூன்று. இந்த மூன்றையும் இணைத்துச் செயல் புரிந்தால் படைப்பாளி ஆகி விடலாம்! தாங்கள் விரும்பிய துறையில் புதியவனவற்றைப் படைக்கலாம்!

1. குறிப்பிட்ட துறையில் திறமை

2. படைப்பாற்றலுடன் கூடிய சிந்தனைத் திறமை

3. அடங்காத பற்று

இந்த மூன்றும் படைப்பாற்றலுக்கு வழி வகுக்கும்.

**குறிப்பிட்ட துறையில் திறமை**

இதை ‘Expertise in a Specific Area: Domain Skills’ என்பர். நியூக்ளியர் பிசிக்ஸில் ஏதேனும் புதியது படைக்க விரும்புவோர் அதைப் பற்றி நிறைய தெரிந்து வைத்திருக்க வேண்டும், இல்லையா என்கிறார் அமாபில். அதே போல ஒரு ஓவியராகச் சாதனை புரியத் துடிக்கம் படைப்பாளிக்கு ஓவியத்தை உருவாக்கும் வண்ணங்கள், பிரஷ் மூலம் வடிவங்களைத் தீட்டும் பாங்கு போன்றவற்றில் திறமை வேண்டும். அதாவது நீங்கள் சாதிக்க விரும்பும் துறை ப்றறிய அறிவு முதலில் உங்களிடம் இருக்க வேண்டும்.

**படைப்பாற்றல் சிந்தனை**

அடுத்து Creative Thinking Skill வேண்டும். ஒரு சூப் தயாரிக்க வேண்டுமெனில் அதற்குத் தேவையான பொருள்களைப் போடுவதோடு அதில் தனித் தன்மையைக் காக்கும் விசேஷ நறுமணப் பொருளையும் சேர்ப்பதுதான் இந்த படைப்பாற்றல் சிந்தனை என்கிறார் அமாபில். வழக்கமாகச் செய்வதை புதுமையாகச் செய்வது; புதுமையாக இருப்பவற்றை வழக்கத்திற்குக் கொண்டு வருவது - இவற்றிற்கு இந்தப் படைப்பாற்றல் சிந்தனைதான் காரணம்! வழக்கத்தை விட்டு புதிய பாணியை உருவாக்கி அதை முழுவதுமாக நிறைவேற்ற வேண்டும். இதற்கு ரிஸ்க் எடுக்கும் மனப்பான்மையும், இதுவரை யாரும் செய்யாத ஒன்றைச் செய்து பார்க்கும் துணிவும் வேண்டும்.

**அடங்காத பற்று.**

இதை Passion என்பர். உளவியல் படி இதற்கான வார்த்தை Instrinsic Motivation. தன்னைத்தானே ஊக்குவித்து, தான் செய்ய விரும்புவதைச் செய்தே தீருவது, எங்கிருந்தோ கிடைக்கும் வெகுமதிக்காக அல்லாமல் தனது ஆத்ம திருப்திக்காகவும், தனது மகிழ்ச்சிக்காகவும் செய்து பார்ப்பதற்கான ஆணி வேர் அடங்காத பற்று!

ஒரு சூப்பைத் தயாரிக்க அடுப்பின் கீழே இருக்கும் தணல் போல இந்த பற்று! அது மேலே உள்ளவற்றை வேக வைத்து, நறு மணத்தை ஊட்டி சுவை மிக்க சூப்பைத் தயாரிக்க உதவுகிறது. அடங்காத வெறி சூடு ஆறாத தணல் போல!

http://kalvimuthu.blogspot.com

ஆகவே எதையேனும் சாதிக்க விரும்புகின்ற இளைஞர்கள் மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்த விரும்புவோர் யாரானாலும் சரி அவர்களுக்குத் தேவை,

1. தங்கள் துறையில் முழு அறிவும் திறமையும்

2. படைப்பாற்றல் சிந்தனை

3. பணி மீது அடங்காத பற்று!

இந்த மூன்றும் இருந்தால் நீங்களும் ஒரு படைப்பாளிதான்!

# இசை கேட்டால் அறிவு வளரும்

"க்ளாஸிகல் ம்யூசிக்" என்னும் பழைய இசையைக் கேட்டால் குழந்தையின் அறிவுத்திறன் வளரும்; குழந்தையின் நடத்தை மேம்படும். ஒருமுகப்படுத்தும் சக்தியும் அதிகரிக்கும் என்று அறிவியல் சோதனைகளின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன.

விஞ்ஞானிகள் பள்ளியில் படித்தோரை மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர். முதல் பிரிவு அமைதி தரும் அல்பினியோனியின் இசையைக் கேட்டது. இரண்டாவத பிரிவு நவீன ஜாஸ் இசையை கேட்டது. மூன்றாவது பிரிவு இந்த இசையையும் கேட்கவில்லை. க்ளாஸிக்கல் இசையைக் கேட்ட குழந்தைகள் வாக்கியங்களை நன்கு மனதில் பதித்து ஞாபகத்தில் வைத்துக் கொண்டன. ஜாஸ் இசையைக் கேட்ட குழந்தைகள் மகா மோசமாக ஞாபக ச்கதி குறைந்தவையாய் விளங்கின. லண்டன் இன்ஸ்டிடியூட் ஆஃப் எஜுகேஷனைச் சேர்ந்த டாக்டர் சூசன் ஹல்லாம் இந்த முடிவுகளை அறிவித்தார். பெரிய மேதைகளால் கம்போஸ் செய்யப்பட்ட இசையை நீண்ட நேரம் கேட்கும் போது, மூளை வளர்ச்சியை அது அதிகரிக்கிறது. இதற்கு 'மொஜார்ட் எபக்ட்' (Mozart Effect) என்று பெயரிட்டுள்ளனர்.

ஆறாவது வயது வரை இசை கேட்பது அதிகமான வளர்ச்சிக்கு வழி வகுப்பதோடு பகுத்து அறியவும் கற்றுக் கொள்ளவும் உதவுகிறது! ஆகவே குழந்தைகள் இசையைக் கேட்டாலே போதும். "மூளையின் அடிப்படைப் பகுதியில் இசைக்கு ஒரு பங்கு உள்ளது. நேரடியாக இது மனப்போக்கை (Mood) பாதிக்கிறது. ஒருமுனைப்படுத்த குழந்தைகளை இது ஊக்குவிக்கிறது. ஒருவரோடொருவர் சேர்ந்து கருத்தைச் சிதறவிடாமல் பார்த்துக் கொள்கிறது இசை" என்கிறார் ஹல்லாம்.

http://kalviamuthu.blogspot.com

ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு சாந்தமான 'பேக் கிரவுண்ட் ம்யூசிக்' என்று போடப்பட்டால், அவர்களது கணக்குப் போடும் திறன் கூடுகிறது என்று இன்னொரு தனிப்பட்ட ஆராய்ச்சி மூலம் கண்டறிந்தார் ஹல்லாம்.

அதேபோல, விஞ்ஞானப் பாடத்தின் போது போடப்பட்ட மொஜார்ட் இசை இளைஞர்களின் ஒருமுனைப்படுத்தும் சக்தியையும், நடத்தையையும் நல்லவிதமாகக் கூட்டியதாம்!

பழைய இசை மூளையைச் சாந்தமடையச் செய்கிறது. முரண்டு பிடிக்கும் குழந்தைகளுக்கு வேல்ஸில் நடந்த ஒரு ஆராய்ச்சியில் மொஜார்ட் இசையைப் போட்ட போது அது அவர்களது உடல் உஷ்ணத்தைக் குறைத்ததோடு நாடித் துடிப்பு, இதயத் துடிப்பு, மூச்சு விடுவது ஆகிய அனைத்தையும் சீராக்கியது கண்டு பிடிக்கப்பட்டது.

தங்கள் குழந்தையின் அறிவுத் திறனை வளர்க்க விரும்பும் பெற்றோர்கள் உடனடியாக இதற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ள காம்பாக்ட் டிஸ்கின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இசையைப் போடலாம்.

மூளை வளர்ச்சியை அதிகரிக்க மொஜார்ட் இசையை குழந்தைகளுக்குத் தர பல கம்பெனிகள் முன்வந்துள்ளன.

அமெரிக்காவின் ஜாயர்ஜியா மாநில கவர்னர் மொஜார்ட எபக்டைப் பேணி பாதுகாக்க மாநில ஆஸ்பத்திரியில் பிறந்த எல்லாக் குழந்தைகளுக்கும் சோனி கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு காம்பாக்ட் டிஸ்கை இலவசமாகத் தரத் திட்டம் ஒன்றை வகுத்து விட்டார்.

‘Build Your Baby's Brain through the Power of Music’ என்பது இந்தத் திட்டத்தின் பெயர். இப்படி வளரும் குழந்தைகளால் இன்னொரு பயனும் உண்டு. நல்ல ‘டேஸ்டில்’ வளர்ந்த இவர்கள் பெரியவர்களாகி தங்கள் குழந்தைகளையும் இதே போல் வளர்ப்பார்கள் என்கிறார் சோனி நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர். இந்தியாவில் மொஜார்ட் இசைக்கு இணையான கர்நாடக இசையை அத்துறை வல்லுனர்கள் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த முன்வருவார்களா?

http://kalviamuthu.blogspot.com

# குழந்தைகளும் 'யோசனை' கூறலாம்

குழந்தைகள் 'சிறுபிள்ளைத்' தனமாக ஏதாவது பேசுவார்கள் என நினைக்க வேண்டாம். அவர்கள் சொல்வதைக் கேட்டால் பல சமயங்களில் மிகப்பெரிய பிரச்னைக்குக் கூட சுலபமான தீர்வு கிடைக்கும். இதோ அப்படி ஒரு நிகழ்ச்சி...

ஜர்னல் ஆஃப் கிரியேடிவ் பிஹேவியர் என்ற பத்திரிக்கை படைப்பாற்றலை, பயிற்சியினால் மேம்படுத்த முடியும் என்று தெரிவிக்கிறது. அறிவியல் பூர்வமாக 170 உத்திகள் படைப்பாற்றலை மேம்படுத்த உள்ளன!

இந்த உத்தியில் ஒன்று 'ஐடியா ஜெனரேஷன் டெக்னிக்' எனப்படும் புதிய யோசனையை உருவாக்குவது! இதை உங்கள் வீட்டுக் குழந்தைகள் செய்ய முடியும் என்று சொன்னால் ஏளனப் புன்னகை பலருக்குத் தோன்றினாலும் தோன்றக்கூடும்! ஆனால் ஸ்வீடன் நாட்டுக் குழந்தைகள் வாங்கிய மழைக்காடுகள் பற்றிய உண்மைச் சம்பவத்தைக் கேட்டால் 'அட அப்படியா' என்று ஆச்சரியப்படுவீர்கள்.

ஸ்வீடன் கிராமப்புறப் பள்ளி ஒன்றில் ஒரு ஆசிரியை! பெயர் ஈனா கெர்ன்! ஒரு நாள் பாடம் நடத்துகையில் தென் துருவப் பகுதியில் ரெயின் ஃபாரஸ்ட் எனப்படும் மழைக்காடுகள் அழிந்து வருகின்றன என்று கூறிய கெர்ன் அதனால் சின்னச் சின்ன மிருகங்கள் முற்றிலுமாக அழிந்து வருகின்றன என்றார். வகுப்பறையில் இருந்த அனேகம் குழந்தைகள் நாய், பூனை போன்ற வளர்ப்பு மிருகங்களை வளர்த்து வந்ததால் பெரிதும் கவலையுற்றனர். "மழைக் காடுகள் என்றால் என்ன? அதை நாங்கள் பார்க்க வேண்டும்" என்று குழந்தைகள் அடம் பிடித்தனர்!

http://kalviamuthu.blogspot.com

"பெரியவர்களானவுடன் நீங்களே அதைப் பார்க்கலாம்" என்று கெர்ன் கூறியபோது, "அதற்குள் மிருகங்கள் இறந்து விடும் என்கிறீர்களே" என்றனர் குழந்தைகள்.

இந்த நிலையில் தான் ஒரு குழந்தை எழுந்து, "அந்தக் காடுகளை நாமே வாங்கி விட்டால் என்ன? அப்போது அதை யாராலும் அழிக்க விடாமல் செய்யலாமே" என்று கூறியது.

இன்னொரு ஆசிரியையாக இருந்தால் இந்த யோசனையைக் கேட்டு சிரித்து இருப்பார். கெர்ன் அப்படி இல்லை! அவர்களை ஊக்கப்படுத்தினார்.

குழந்தைகள் 'மழைக்காடுகளை வாங்க எவ்வளவு பணம் வேண்டும். ஒரு இடத்தை வாங்குவது என்றால் என்னென்ன செய்ய வேண்டும்' என்றெல்லாம் கேள்விகள் கேட்கத் தொடங்கினர்! எல்லாவற்றையும் விளக்கினார் கெர்ன்.

எல்லாக் குழந்தைகளும் உற்சாகமாக பணியைத் தொடங்கினர். சின்னச் சின்ன எக்ஸிபின்கள், குதிரை ஓட்டம், நாய் ஓட்டப் பந்தயம், முயல்கள் கலந்து கொண்டு தாண்டி ஓடும் ரேஸ் என்று பல சிறு சிறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து பணம் சேர்க்க ஆரம்பித்தனர். இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது. ஸ்வீடனின் அனைத்துப் பள்ளிகளும் இதில் ஈடுபட்டன. ஒரு புதுப்பாடல் உருவாக்கப்பட்டது.

ஆஹா, அற்புதமான
மழைக்காடுகளே!
நீங்கள் ஏன் அழிய
வேண்டும்?
எல்லா உயிரினங்களுக்கும்
நீங்கள் தேவை!
நாங்கள் அழிவைத்
தடுப்போம்!
நீங்கள் துண்டிக்கப்படக்
கூடாது!
எங்களுக்கு நீங்கள் தேவை!

முதலில் ஒரு சிறு பகுதியை மட்டும் வாங்குவதாக இருந்த குழந்தைகள் பல நாடுகளிலிருந்து ஆதரவு குவியவே மழைக்காடுகளையே வாங்குமளவு பணத்தைச் சேர்த்தனர்!

ஸ்வீடன் தேசத்து அரசர் அந்தப் பள்ளிக்கு நேரடியா வந்து குழந்தைகளைப் பாராட்டினார்!

உங்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் அதைத் தீர்க்க குழந்தைகளிடம் வழி கேளுங்கள் என்கிறார் கெர்ன்!

http://kalviamuthu.blogspot.com

நாளைக்கு உங்கள் குழந்தை ஒரு யோசனை சொல்லும்போது ஸ்வீடன் தேசத்து சம்பவத்தை நினைவில் கொண்டு அதற்குரிய மதிப்பைக் கொடுத்து அதை அமல்படுத்த முடியுமா என்று பாருங்கள்.

சிறுபிள்ளைத்தனமான யோசனை என்று சொல்வது தான் சிறு பிள்ளைத்தனமானது. 170 படைப்பாற்றல் உத்திகளில் மேம்பட்ட உத்திகளுள் ஒன்று குழந்தைகளின் யோசனை!

# குழந்தைகளின் அறிவுத்திறன்

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு தான். தன் செல்லக் குழந்தைக்கு வயதை மீறிய அறிவு என்று சொல்லிப் பெருமைப்படுவதை மறுத்துப் பேச யாருக்குத்தான் தைரியம் வரும்? ஆனால் அறிவியல் முறைப்படி இப்போது குழந்தைகளின் அறிவுத்திறனைச் சோதனை செய்து பார்க்கலாம். பத்தே பத்து கேள்விகள்தான்!

இந்தப் பத்து கேள்விகள் சின்னக் குழந்தை ஒரு பொம்மையைக் கீழே போடுவதிலிருந்து உணவு தரும் போது என்ன ரீ-ஆக்ஷன் தருகிறது என்பன போன்ற அடிப்படையிலிருந்து உருவாக்கப்பட்டவை! ஒவ்வொரு கேள்விக்கும் மூன்று விதமான விடைகள் தர முடியும்!

உதாரணமாக ஒரு பொம்மை டெலிபோனை கொடுத்தால், உங்கள் குழந்தை அதை மற்ற பொம்மைகளைப் போல வைத்து விளையாடலாம். அல்லது அதன் மீது அக்கறை இல்லாமலும் இருக்கலாம். அல்லது நிஜமானது போல பாவனை செய்யலாம். அல்லது மூன்றாவது விதமாக அதை நிஜ டெலிபோனைப் போல ரிசீவரைத் காதில் வைத்து பட்டன்களை அழுத்த ஆரம்பிக்கலாம். இன்னும் சில கேள்விகள் குழந்தைகளுக்குத் தங்கள் பெயரை அறிய முடிகிறதா என்பது உள்ளிட்டவை.

இந்தக் கேள்விகளை அமைத்த நிறுவனத்தின் பெயர் ‘ஃபிர்-ப்ரைஸ்’. உலகில் பிரபலமான பொம்மை தயாரிக்கும் நிறுவனம் இது!

http://kalviamuthu.blogspot.com

இந்த அறிவுப் போட்டியை நடத்தி மகிழும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் வயதுக்கு உரிய அறிவைக் கொண்டிருப்பதை அறிந்து மகிழ்கிறார்கள். இளம் தாய்மார்களில் ஒருவர் என்றால், எங்கே நீங்கள் தயாரா...? பத்துக் கேள்விகளில் சில மாதிரிக் கேள்விகள் மட்டும் இதோ...

1) உங்கள் குழந்தை
அ) உணவு வேண்டாம் என்றால் தனது தலையைத் திருப்புகிறதா?
ஆ) கைகளைத் தூக்கி எடுக்க முயல்கிறதா?
இ) விளையாட்டில் மூழ்குவதோடு குட்-பை சிக்னல் தருகிறதா?

2) உங்கள் குழந்தை
அ) பொம்மையைத் தரும்போது கையினால் அதைப் பற்றிக் கொள்கிறதா?
ஆ) வேண்டுமென்றே பொம்மையைக் கீழே போடுகிறதா?
இ) இரண்டு கப்களையோ (பொம்மை) செங்கல்களையோ அடுக்கும் திறமை உள்ளதா?

3) உங்கள் குழந்தை

அ) தனது மழலைக் குளறல் மூலம் உங்களுடன் பேசுகிறதா?

ஆ) நீங்கள் பார்க்கும் திசையைப் பார்க்கிறதா?

இ) பொம்மை கப்பிலிருந்து எதையேனும் சாப்பிடுவது போல பாவனை செய்து காண்பிக்கிறதா?

4) உங்கள் குழந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிடும் போது...

அ) அந்த அழைப்பைக் கண்டு கொள்வதில்லையா?

ஆ) உங்கள் பக்கம் திரும்புகிறதா?

இ) தன் பெயரை அறிவதோடு அம்மா அப்பாவை உணர்கிறதா?

5) உங்கள் குழந்தை

அ) ஒரு பொம்மையைக் கீழே போடும் போது அதைக் கண்டு கொள்வதில்லையா?

ஆ) கீழே விழுந்த பொம்மையைப் பார்க்கிறதா?

இ) வேண்டுமென்றே கீழே போட்டு அது எங்கே விழுகிறது என்று பார்க்கிறதா?

ஆறு மாதக் குழந்தைக்கு மேலே உள்ளவற்றில் சில செய்யத் தெரிந்திருக்காது. ஆகவே 3 முதல் 4 பாயிண்ட் எடுக்கும். ஒன்பது மாதக் குழந்தை என்றால் சில (அ) சில (ஆ) மூலம் 7 முதல் 8 பாயிண்ட் எடுக்கும். 12 மாதக் குழந்தை என்றால் சில (ஆ) சில (இ) மூலம் 12 முதல் 13 பாயிண்ட் எடுக்கும். அதை விட அதிகமாக பாயிண்ட் எடுத்தால் அதிக புத்திசாலித்தனமான குழந்தை என்பது உறுதி!

பாயிண்ட் விவரம்:

http://kalviamuthu.blogspot.com

ஒவ்வொரு (அ)வுக்கும் பாயிண்ட் : 1

ஒவ்வொரு (ஆ)வுக்கும் பாயிண்ட் : 2

ஒவ்வொரு (இ)க்கும் பாயிண்ட் : 3

# அறிவு வளர குழந்தைகளுடன் பேசுங்கள்

குழந்தைகளுடன் அம்மாமார்கள் பேசுவது எப்போதும் ஒரு பக்கப் பேச்சுதான்! அம்மாதான் பேசுவது வழக்கம்; குழந்தை பேசாது. நவீன அறிவியல் ஆய்வு ஒன்றின் படி இப்படிப் பேசுவது குழந்தையின் அறிவை வளர்க்கிறது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒன்பது மாதத்திலிருந்த தினமும் அரை மணி நேரம் குழந்தையுடன் பேசினால் போதும். குழந்தை வகுப்பில் சேரும்போது அதிக மார்க்குகளைப் பெறும் என்கிறது ஆய்வு!

டி.வி. அல்லது வீடியோ முன் தண்டத்திற்குச் செலவிடும் நேரத்தை விட குழந்தைகளுடன் 'க்வாலிட்டி டைம்' எனப்படும் இந்த நேரம் மிக்க முக்கியத்துவம் வாய்ந்தது என்கின்றனர் விஞ்ஞானிகள்! டாக்டர் சல்லி வார்டு என்னும் பெண்மணி குழந்தை நல அபிவிருத்தி நிபுணர். ஏழு வருட காலம் ஆராய்ச்சி செய்தார் இவர். பெற்றோர் குழந்தைகளுடன் எப்படிப் பேசுகின்றனர் என்பதற்கும், குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் நேரடித் தொடர்பு இருப்பதை, இவரது ஆய்வு உறுதிப்படுத்துகிறது.

மான்செஸ்டரில் 140 குழந்தைகளை தேர்ந்தெடுத்து ஒன்பது மாதம் முதல் ஏழு வயது வரை அவர்களது வளர்ச்சியினை கண்காணித்தார் இவர். எப்படி குழந்தைகளுடன் பேசுவது என்று உரிய ஆலோசனைகளை பெற்றோருக்குத் தந்தார் அவர்.

டி.வி. மற்றும் இதர தொந்தரவுகள் இல்லாமல் குழந்தையுடன் தினமும் அரை மணி நேரம் இன்டர்வென் டைம் எனக் கூறப்படுவது இது. குழந்தையின் ஒன்பதாவது மாதத்திலிருந்து பேச ஆலோசனை வழங்கப்பட்டது.

http://kalvianmuthu.blogspot.com

குழந்தைகளுக்குப் பிடித்ததைத்தான் பேச வேண்டும் என்ற கண்டிஷன் வேறு! தன்னுடைய ஷாப்பிங் பிளானைப் பற்றிக் குழந்தையிடம் பேசக்கூடாது.

ஏழு வருடம் கழித்து குழந்தைகளை அறிவு வளர்ச்சி சோதனைக்கு உட்படுத்தியபோது முடிவுகள் பிரமிப்பை அளித்தன.

15 மாதங்களுக்கு முந்தியே மற்ற சாதாரண குழந்தைகளை விட அறிவு வளர்ச்சி பெற்று விடுகிறது இந்த குழந்தைகள்! ஐக்யூவிலே முதல் இடம் வகிப்பது இந்தக் குழந்தைகள்தாம்! 130க்கும் மேல் ஐ.க்யூ எண்ணுள்ள கருவிலே திரு உடைய பிறவி மேதைகள் இப்படிப்பட்ட குழந்தைகள்தாம்! குழந்தை பேச முடியாவிட்டாலும் நீங்கள் பேசுங்கள் என்கிறார் இந்த விஞ்ஞானி.

பி.பி.சியின் நாளைய உலகம் இன்றைய இரவில் என்ற இவரது நிகழ்ச்சி அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.

# குட்டிக் குழந்தைகள் பேசுகின்றன...

மழலைகள் தன் மலர்ந்த விழிகளால் உங்களைப் பார்க்கும்போது ஆனந்தம் அடைவது ஒரு புறம் இருக்கட்டும் - அது உங்களுடன் பேசுகிறது என்றால் வியப்பாக இல்லை? மழலைக் குளறல்களை இனம் புரியாத மொழி என்று இதுவரை உலகின் தாய்மார்கள் உட்பட அனைவரும் எண்ணி இருந்தது தவறு என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு அறிந்துள்ளனர்.

குழந்தை வாய் உதடுகள் அசைகின்றனவே, அதற்கு ஓர் அர்த்தம், மொழி இருக்கிறதாம்! குளறும் போது வலது பக்கமே குழந்தைகளின் வாய் செல்கிறதாம்! வயதான போதும் இப்படியே தான் பேசுகிறோமாம்! ஏனெனில் மனித மொழி அறிவு மூளையின் இடம் புறம் தான் உள்ளது. இதுவே உடலில் வலது பக்கத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

படத்தில் உள்ள குழந்தையின் வாய் அசைவு அது நம்முடன் பேசத் துடிப்பதைக் காண்பிக்கிறது.

அடுத்த படத்தில் உள்ள குழந்தை அகம் மலர்ந்து சிரிக்கிறது.

ஸயின்ஸ் ஜர்னலில் அமெரிக்க மற்றும் கனடிய விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

http://kalviamuthu.blogspot.com

ஐந்து முதல் 12 மாதம் வரை ஆன குழந்தைகளின் முக பாவங்களை ஏராளமான வீடியோ கிளிப்பிங்ஸ் எடுத்து ஆராய்ந்து அது வலது பக்கம் தன் வாயைக் கொண்டு செல்கிறதா மெதுவாக சிரிக்க மட்டும் செய்கிறதா என்றெல்லாம் சோதித்தனர். இடது பக்கம் வாயைக் கொண்டு செல்லும் குழந்தைகள் சிரிக்க மட்டும் செய்வதோடு உணர்ச்சி பூர்வமான செய்கைகளைச் செய்கின்றன என்றனர் விஞ்ஞானிகள்.

நியூஹாம்ப்ஷையரைச் சேர்ந்த புரபஸர் ஆன் பெடிடோ, “இந்த ஆய்வு முடிவுகள் படி, குழந்தைகள் மிக மிக விரைவாகவோ நம்முடன் பேச ஆரம்பிக்கின்றன” என்கிறார்! என்ன தாய்மார்களே, உங்கள் மழலையின் வாய் இடது புறம் அசைகிறதா - சிரிப்பதற்கு அல்லது வலது புறம் அசைகிறதா - பேசத் துடிக்க? உடனே பாருங்கள்.

# உங்கள் குழந்தைகளை சாதனையாளர் ஆக்குவது எப்படி?

இளம் தாய்மார்களும் நடுத்தர வயது பெண்மணிகளும் தங்கள் குழந்தைகளையும் கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவியரையும், 'படம் வரையாதே, கதை கேட்காதே, டி.வி.பார்க்காதே, படி, படித்து முன்னேறு" என்று எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பதால் குழந்தைகளை எரிச்சலடையச் செய்வதுடன் அவர்களே தங்கள் குழந்தைகளின் வளமான எதிர்காலத்தைத் தடுப்பதை அறியாமல் இருக்கிறார்கள்!

கற்பனை என்பது அற்புதமான ஒன்று! இளம் வயதிலேயே அவர்கள் போக்கில் மனச் சித்திரங்களை உருவாக்க விட்டுவிட்டால் அவர்கள் சிறந்த சாதனையாளர்களாக பிற்காலத்தில் உருவாவதோடு வகுப்பில் முதன்மை பெற்றவராகவும் வருவார்கள் என்பது கிரியேடிவிடி பற்றிய அறிவியல் ஆய்வுகளின் முடிவு!

பேப்பரையும் வண்ணத்தூரிகையையும், வண்ணங்களையும் தந்து குழந்தைகளை அவர்களின் படைப்புலகத்தில் விட்டுவிட்டு அகன்று விட வேண்டும். நிஜத்தில் நாம் பார்க்கும் உருவங்களையும், விலங்குகளையும் போடுமாறு அவர்களை வற்புறுத்தக் கூடாது. தங்கள் கற்பனைக்கேற்ப உருவங்களையும், இயற்கைக் காட்சிகளையும் வரையும் அவர்கள் பிற்காலத்தில் பல்வேறு நிஜங்களைப் பார்க்கும்போது தங்கள் அனுபவத்தில் மெருகேற்றிக் கொள்வார்கள். 'கதைசொல்வது' என்பது படைப்பாற்றலை மேம்படுத்தும் ஒரு அற்புத உத்தி! பல்வேறு நாடுகளுக்குச் சென்ற வீரர்களைப் பற்றிய வரலாறுகள் எல்லா நாகரிகங்களிலும் உண்டு. அர்ஜூனனின் யாத்திரை, கலிவரின் யாத்திரை என கற்பனையைத் தூண்டி விடும் அதிசய வரலாறுகள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. மகாபாரதமும் ராமாயணமும் சுட்டிக் காட்டாத கற்பனையே இருக்க முடியாது!

http://kalviamuthu.blogspot.com

அதேபோல 'தொல்லைக்காட்சி' என்று செல்லமாகத் திட்டப்படும் தொலைக்காட்சியில் விலங்குகள் பற்றியும், பல்வேறு நாகரிகங்கள், கண்டுபிடிப்புகள் பற்றியும் காண்பிக்கப்படும் டிஸ்கவரி சானல் நிகழ்ச்சிகளை சீரியலை ஒதுக்கிவிட்டு குழந்தைகளுக்குப் போட்டுக் காண்பிக்க வேண்டும். திரைப்படங்களிலும் சாகஸம், துணிச்சலைக் காட்டும் அற்புதப் படங்கள் ஏராளம் உள்ளன. அவற்றைப் பார்க்க குழந்தைகளைத் தூண்ட வேண்டும்.

எந்த ஒரு தீமையிலும் ஒரு நன்மை இருக்கும். அதைக் கண்டு அதில் குழந்தைகளை ஈடுபடுத்தி விடலாம்! தாழ்வு மனப்பான்மையை அகற்றி சாதனையாளர்களாகத் தங்கள் குழந்தைகளை உருவாக்குவது இளம் தாய்மார்களின் கையிலேயே உள்ளது.

கிரியேடிவிடி எனப்படும் படைப்பாற்றலையும், கல்வியையும் பற்றி ஆய்வு செய்துள்ள ஆய்வாளர்கள் சாண்ட்ரா டபிள்யூ ரஸ் மற்றும் ஜனஸ் சால்க் ஆகியோர் "குழந்தைகளின் கற்பனையும், அவர்களின் மனச் சித்திரங்களுமே அவர்களின் வருங்காலத்தை நிர்ணயிக்கின்றன" என்கிறார்கள்.

# ஜாக்கிரதை! வருகிறது ந்யூரோ மார்க்கடிங்!

அலுவலகத்திற்கு செல்லும் போதோ, வரும் போதோ பஸ்ஸிலோ அல்லது ரயிலிலோ ஜன்னல் வழியாக வெளியே பார்த்து விளம்பர பலகைகளைப் படிக்கும் அப்பாவியாக நீங்கள் இருக்கக்கூடும்; அல்லது வேர்த்து விறுவிறுக்க கணவருக்கும், குழந்தைகளுக்கும் வேண்டியதைச் செய்து முடித்து விட்டு 'அக்கடா' என்று டி.வி. சீரியலே கதி என்று இருக்கும் ஆயிரக்கணக்கான சராசரிப் பெண்மணிகளுள் ஒருவராகவும் நீங்கள் இருக்கக்கூடும்!

ஆனால் நீங்கள் சாதாரணமாகப் பார்க்கும் விளம்பரப் பலகைகளின் பின்னரும் சீரியல்களின் இடையே மின்னும் வண்ணமய விளம்பரங்களின் பின்னரும் ஒரு அபாயம் ஒளிந்திருப்பது உங்களுக்கே தெரியாது!

இதுவரை ஆராய்ச்சியாளர்களுக்கே பிடிபடாது இருந்த இந்த விஷயம் இப்போது 'நியூரான்' என்ற மூளை இயல் ஆராய்ச்சியின் உயர் தர சோதனை முடிவுகளை வெளியிடும் அறிவியல் பத்திரிக்கையில் வந்திருக்கிறது! நாம் பார்க்கும் விளம்பரங்களில் நம் மனம் முழுமையாக ஈடுபடாவிட்டாலும் கூட மூளை அவற்றைப் பார்த்துத் தனக்குள் சில விஷயங்களைப் பதிவு செய்து கொள்கிறது.

இந்த மூளைப் பதிவைக் கண்டுபிடித்து விட்ட நவீன அட்வர்டைஸிங் ராட்சஸர்கள் இதைப் பயன்படுத்த முடிவெடுத்து விட்டனர்.

http://kalviamuthu.blogspot.com

முதன் முதலாக உலகின் பெரும் மார்க்கடிங் போட்டிக்கு இலக்கான குளிர்பானங்களான பெப்ஸி கோலா - கோக்கோ கோலா விளம்பரப் போரின் போது ஒரு விஷயம் கண்டுபிடிக்கப்பட்டது. சோதனைக்கு ஆட்படுத்தப்பட்டவர்களிடம் பானங்களைக் கொடுத்த பின்னர், அவர்களுக்கு எது பிடித்திருக்கிறது என்று கேட்ட போது, விடையாக மூளை ரெஜிஸ்டர் செய்த 'பிராண்டட் பானமே' வருகிறது என்பது தெரிய வந்தது! எம்.ஆர்.ஐ (MRI SCAN) ஸ்கேன் எனப்படும் மூளை ஸ்கேனரை வைத்து நூற்றுக்கணக்கான சோதனைகளை நடத்திய பின்னர் விளம்பர மேலாளர்கள் ஏக குஷியில் இருக்கிறார்கள்.

நம்மை அறியாமலேயே நமது மூளையின் இன்பப் பகுதிகள் சில காட்சிகளைப் பார்த்தவுடன் தூண்டப்படுகின்றன. இதை மூளை பதிவு செய்வதால் அந்த விளம்பரப் பொருளைப் பார்த்தவுடன் அதை வாங்க மனம் துடிக்கிறது; பர்ஸ் இளைக்கிறது!

வண்ணத்தையும், வாசனையையும் கூட மூளை ஏற்கிறது. ஸ்ட்ராபெர்ரியை சிவப்புக் கலருடன் அதற்குரிய வாசனையுடன் காட்டினால் மூளைப் பகுதிகள் பளிச்சிடுகின்றன. ஆனால் அதே ஸ்ட்ராபெர்ரியை நீலக்கலருடன் காண்பித்தால் மூளைப் பகுதிகள் மங்கலாகி விடுகின்றன.

ஐஸ் கியூப்களை பீர் பாட்டிலில் போடும் பெண்மணி வரும் விளம்பரமுள்ள பீர் பாட்டில்கள் செக்ஸ் உணர்வுக்கு பீர் பாட்டில்கள் அவசியம் என்ற நிச்சய நிலைமையை ஏற்படுத்தி விட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். கார்ல் முர் என்ற மக்-கில் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நிர்வாக இயல் பேராசிரியர் 'ந்யூரோ மார்க்கெடிங்' இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது என்கிறார். பிரிட்டனிலிருந்து கனடாவிற்கு பரவி விட்ட ந்யூரோ மார்க்கெடிங்கை தடை செய்ய வேண்டும் என்ற அமெரிக்காவில் குரல் எழும்பியுள்ளது.

ஆனால் விளம்பரங்களை எப்படித் தடை செய்ய முடியும் என்று நெஞ்சை நிமிர்த்திக் கேட்கின்றனர் விளம்பரத் துறையினர். அமெரிக்க செனட் கமிட்டி சேர்மனிடம், "ஆரோக்கியமற்ற 'ஜங்க்' உணவை இப்படி ந்யூரோ மார்க்கெடிங் மூலமாக எங்களிடம் தள்ளி விட்டால் எங்கள் நிலைமை என்ன ஆகும்? என்று விளம்பரம் பற்றி ஜாக்கிரதையாக இருங்கள்" இயக்கத் தலைவர் கேரி ரஸ்கின் கடிதமே எழுதி விட்டார்!

'அபாயம்', 'தொத்துக்கிருமி' போன்ற வார்த்தைகள் மூளையின் அமிக்டலா (Amygdala) பகுதியில் பதிவாகப் பெரும் பயத்தை ஏற்படுத்துகின்றன. ஆகவே அவற்றைப் போக்கும் விளம்பரங்களை மூளை மிகவும் கவனமாகப் பதிவு செய்து கொள்கிறது. அதே சமயம், 'பார்', 'அண்ணன்' போன்ற சாதாரண வார்த்தைகளை அது கண்டுகொள்வதில்லை. ஆகவே நியூரோ மார்க்கெடிங் நிபுணர்கள் நம்மைப் பிடிக்க வேண்டிய வார்த்தைகளை விளம்பரத்தில் பிடித்துப் போட ஆரம்பித்துவிட்டனர்.

1974ல் அமெரிக்காவில் பாப் கார்ன் விளம்பரம் ஒன்று தடை செய்யப்பட்டது.

http://kalviamuthu.blogspot.com

விளம்பரக்கலை என்ன ராக்கெட் விஞ்ஞானமா என்ற ஜோக் அடித்த அந்த துறையினரே, 'அட, இது மூளை சர்ஜரி துறையாக இருக்கிறதே' என்று இப்போது வியக்கின்றனர்.

ஆகவே, நாம் விளம்பரங்களைக் கண்டு மயங்காமல் உஷாருடன் ஒவ்வொரு பொருளையும் வாங்குமுன் தீர ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏனெனில் நம் மூளையே நம்மைத் தப்பாகக் கவர்ந்து இழுக்க அனுமதிக்கக்கூடாது. விளம்பரங்களை உணர்ச்சி பூர்வமாகப் பார்க்காது அறிவியல் அடிப்படையில் அணுகும் முறையே ந்யூரோ மார்க்கெட்டிங்கிலிருந்து நம்மைக் காக்கும் கவசமாக இருக்கும்!

# அறிவியல் அலசலில் 'காதல்'

காதல் தோன்றுவது ஏன்?

உலகில் ஆணும் பெண்ணும் தோன்றிய போது கூடவே தோன்றியது - காதல்.

அழிக்க முடியாத மாபெரும் சக்தி. கவிஞரும், காளையரும், கன்னியரும் புகழும் சக்தி.

'அவளுக்காக உயிரையும் தருவேன்.' என்ற வார்த்தைகளையோ 'அவளிடம் அவன் எதைக் கண்டு மயங்குகிறான்' என்ற வார்த்தைகளையோ கேட்கும் போது காதலைப் பற்றி புரியாமல் தவிக்கிறோம்.

ஆயிரமாயிரம் பேரில் ஒரு குறிப்பிட்ட ஆணும் ஒரு குறிப்பிட்ட பெண்ணும் எப்படி பரஸ்பரம் ஈர்க்கப்படுகின்றனர்? எதனால்? ஏன்? ஏன்? ஏன்?

**அறிவியல் அலசல்**புரியாத காதலை அறிவியல் அலசிப் பார்க்க துணிந்து விட்டது. அறிவியல் உரை கல்லில் அந்த அற்புதமான உணர்வை உரைத்துப் பார்த்து விட்டனர் விஞ்ஞானிகள்.

http://kalviamuthu.blogspot.com

மாடல் அழகி ஒருத்தி சற்று பருமனானவள். காதல் வயப்பட்டு ஒருவனைக் காதலிக்க ஆரம்பித்தாள். உடனே இளைக்க ஆரம்பித்து இன்னும் அழகாகி விட்டாள்.

காதலிப்பவர் சாப்பாட்டைக் குறைத்து இளைப்பது ஏன்?

உலகப் புகழ்பெற்ற மசாசூஸெட்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் ப்ரெய்ன் அண்ட் காக்னிடிவ் துறை ஆராய்ச்சியாளரான டாக்டர் ஜூடித் வுர்ட் மென், "பெரும்பாலானோர் பசி அதிகம் எடுக்கிறது என்று அதிகம் சாப்பிடுவதில்லை. இறுக்கத்தினாலேயோ (Stress) அல்லது தனியாக இருப்பதினாலேயோ தான் அதிகம் சாப்பிடுகின்றனர். கார்போஹைட்ரேட்ஸ் அதிகம் இருக்கும் உணவு வகைகள் செரோடோனின் (Serotonin) என்ற கெமிக்கலை மூளையில் உற்பத்தி செய்கிறது. இதனால் சாப்பிட்ட இருபது அல்லது முப்பது நிமிடங்களில் அலாதியான ஒரு அமைதி உணர்வு ஏற்படுகிறது. கொழுப்பு உணவை சாப்பிடுவதால் மூளையில் எண்டார்பினின் (Endorphins) அளவு கூடுகிறது; இது இயற்கையான மார்பினை சாப்பிட்டதால் ஏற்பட்ட (போதை) உணர்வை ஏற்படுத்துகிறது." என்ற வட கரோலினா ட்யூக் பல்கலைக் கழக மருத்துவ உளவியல் பேராசிரியை சூசென் ஷிப்மென் கூறுகிறார்.

டெக்ஸாஸ் ஏ அண்ட் எம் பல்கலைக் கழக பேராசிரியர் லாரி கிறிஸ்டென்ஸன் காதல் வயப்பட்டோருக்கு பெரும் களிப்பு உணர்வு ஏற்பட்டு அட்ரினலின் அளவு கூடுகிறது என்கிறார்.

காதல் இளைக்க வைக்கிறது; மனதிற்கு இன்பம் அளிக்கிறது. (சங்க இலக்கியத்தில் விளக்கம் காணலாம்)

காதல் வயப்பட்டோருக்கு சக்தி கூடுவதோடு குறைந்த அளவு தூக்கமே போதுமானதாக இருக்கிறது. தோலின் மெருகு ஏறுவதோடு கேசத்தின் பளபளப்பும் கூடுகிறது.

பிரபல உளவியல் சிகிச்சையாளரான தயாள் மிர்சந்தானி, “காதலிப்பவருக்கு உலகின் கூரை மீதிருந்து கும்மாளம் போடுவது போன்ற உணர்வு இருக்கும்; இருப்பதை விட இன்னும் இளமையாக ஆகி விடுவர். உண்மையிலேயே அவர்களின் இதயத் துடிப்பும் வேகமாகிறது. தோல் மெருகேறுகிறது. ரகசிய புன்சிரிப்பு ஒன்று சதா அவர்கள் முகத்தில் மறைந்தே இருக்கும். வெட்கத்தில் சிவந்த முகம், வேர்வையான உள்ளங்கைகள் பலமான மூச்சு-இவையும் காதலரின் அடையாளங்கள்” என்கிறார் அவர்.

பாடி ஸ்ட்ரெஸ் (Body Stress) என்கிறோமே அதன் அடையாளங்களும் காதலரின் உடல் உணர்வுகளும் ஒன்று போலவே இருக்கும்.

சுவாசிப்பது புதிய காற்று; உடலில் அபரிமிதமான சக்தி; அதிக ரத்த அழுத்தம்; வேகமான இதயத் துடிப்பு; இதற்குக் காரணம்; மூளைக்குச் செல்லும் கெமிக்கலின் வழி இரண்டிற்கும் ஒன்றே தான்!

காதலைப் பற்றி அறிவியல் ஆராய்ச்சி நடத்தி, அதற்குக் காரணமான கெமிக்கல்களாக பெனைல் எதிலமைன் (Phenylethylamaine), நோர்பைன்பிரைன் (Norepinephrine), டொபமைன் (Dopamin) ஆகியவைகளை இனம் கண்டுள்ளது.

http://kalviamuthu.blogspot.com

இதற்குக் கூடவே ஆதரவான உடல் அமைப்பும் உடல் இயக்கத்தை உச்ச அளவில் தூண்டுகிறது.

வேகமான சுவாசம், அதிக நாடித்துடிப்பு, சந்தோஷ உணர்வு, பூரிப்பின் உச்ச நிலை, உடனே பேச வேண்டும் என்ற துடிப்பு, வெட்கத்தை உதறித் தள்ளுவது, ஆணோ, பெண்ணோ பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நெருங்குவது இவை அனைத்திற்கும் காரணம் இந்த கெமிக்கல்களே!

திடீரென ஒருவர்பால் ஈர்க்கப்படுவதற்கு மூளையில் விஷேசமாக எற்படும் மாறுபாடே காரணம். அதற்கு இந்த சிக்கலான ஹார்மோன்களே உதவி புரிகின்றன என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

காதலின் ஆழமான வேர்கள் கெமிஸ்ட்ரி, பயாலஜி, எவொல்யூன், என பல துறைகளிலும் ஊடுருவி உள்ளன.

மூளையில் ஏற்படும் கெமிக்கல் மாறுபாடுகள் வேறு ஒரு உணர்வு நிலையை (Aternate Consciousness) ஏற்படுத்துகிறதாம்!

விலங்குகள் கூட தன் 'இணையை' கலவிக்காக அழைக்கக் காரணம் 'பெரோமோங்கள்' எனப்படும் கெமிக்கலே!

மிருகங்களின் இனப்பெருக்க உணர்வை ஏற்படுத்தும் கெமிக்கல் இது.

மனிதர்களும் பெரோமோன் வாசனையால் பாதிக்கப்படுகின்றனர்.

மிகுந்த சிக்கலான விஷயம் இது. மிகச் சிறிய அளவே, மேலோட்டமாக, இதைப் பற்றி அறிவியல் அறிந்துள்ளது.

இந்த வாசனையே காதலன், காதலி ஒருவர் பால் மற்றொருவரை ஈர்க்க உதவுகிறது.

இதை உணர்ந்தே வாசனை திரவியம், செண்ட் தயாரிப்போர் இப்போது இதில் அதிகம் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

இந்த வாசனை மற்றவர் யாருக்கும் தெரியாத சாதாரண அளவே இருக்கும்; ஆனால் காதலன், காதலி உடல் பாங்கால் அவர்கள் கூட அறியாமலேயே பாதிக்கப்படும் நிலைக்கு வந்து விடுவர்!

பயாலஜிஸ்ட் டாக்டர் டேவிட் டால்பெர்க் (Dr David Dolberg) இந்த பெரோமோன் தியரியை வைத்து ஒரு பெர்ஃப்யூமையே பேடன்ட் செய்து விட்டார்.

பெரோமோன் 'செக்ஸை' தூண்டவில்லை; ஆனால் கவர்ச்சியைத் தூண்டுகிறது. 'ரொமான்ஸ்' அதிகரிக்கவே காதல் வயப்பட்ட கவிதை உணர்வில் ஆழ்ந்துவிட வைத்து விடும்.

http://kalviamuthu.blogspot.com

PEA எனப்படும் பெனில் எதிலமின் (Phenelethylamine) மட்டும் லேசுப்பட்டதா, என்ன?

கிளுகிளுப்பூட்டும் உணர்வு, உடல் முழுதும் பரவும் இன்னதென்று சொல்ல முடியாத உணர்ச்சி, காதலிப்பவரைக் கண்டவுடன் மனதில் எழும் உற்சாகம் - இவை அனைத்திற்கும் காரணம் PEA தான்!

ஆம்பிடாமைன்ஸுடன் (Amphetamines) இணைந்து PEA காதலரைப் படுத்தும் பாடு பெரும்பாடு!

'தி சயின்ஸ் ஆஃப் லவ்: அண்டர்ஸ்டாண்டிங் லவ் அண்ட் இட்ஸ் எபெக்ட் ஆன் மைண்ட் அண்ட் பாடி' என்ற பிரபல புத்தகத்தை எழுதிய ஆன்டனி வால்ஷ் "நம்மைக் கவர்ந்த ஒருவரைப் பார்த்தவுடனேயே நம் PEA பாக்டரியில் விசில் அடிக்கத் துவங்குகிறது" என்கிறார்.

ஆனால் ஒரு மோசமான செய்தி:- இந்த கெமிக்கல்கள் மூன்று வருடங்களிலேயே வறளத் துவங்குகிறது.

நல்ல வேளை, இதற்குப் பதிலாக வேறு ஒரு புதிய கெமிக்கல் வகைகள் நம்மை

ஆட்கொள்கின்றன.

நம்மைக் கவர்ந்த 'துணை' அருகிலேயே இருப்பதால் மூளையில் எண்டார்பின் சுரக்கப்படுகிறது. இது அமைதி மற்றும் பாதுகாப்பான ஒரு உணர்வை தருகிறது.

இத்தோடு ஆக்ஸிடாசின் (Oxytocin) என்ற கெமிக்கலே உடல் உறவின் உச்ச நிலைக்குக் காரணம் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

முன்பு, குழந்தைகளைப் பாராட்டி, சீராட்டவும், பால் சுரக்கவும் மட்டுமே காரணமாகக் கருதப்பட்ட இந்த ஆக்ஸிடாசின் பற்றி பிரபல டைம்ஸ் பத்திரிக்கை ஒரு கட்டுரையையே வெளியிட்டு விட்டது. நான்கு முதல் ஐந்து மடங்கு சாதாரண அளவை விட 'க்ளைமாக்ஸில்' அதிக அளவு உணர்வு ஏற்பட ஆக்ஸிடாசின் தான் காரணமாம்!

சுருக்கமாக சொல்லப்போனால் அறிவியல் அலசலில் காதல் என்பது சில கெமிக்கல்கள் தான்:-

வாழ்க்கை இன்ப மயம், பரபரப்பூட்டும் கிளுகிளுப்பு ஆஹா என்ன ஒரு காதல் இன்பம் என்கிறீர்களா - வேறொன்றுமில்லை இதற்கு மூல காரணம் PEA பெனில் எதிலமின் தான்!

என்னவென்று சொல்ல முடியாத உணர்வு; காதலன் காதலியை விட்டு பிரிய முடியாத உணர்வு - இது தான் உண்மைக் காதல் என்கிறீர்களா? பெரோமோன் உங்களைப் படுத்தும் பாடு இது!http://kalviamuthu.blogspot.com

இதயம் வேகமாகத் துடிக்கிறது; ரத்த ஓட்டம் துடிப்பாக ஓடுகிறது; துள்ளல் நடை; அடிவயிற்றில் பிசைவது போல ஒரு உணர்வு; அதிகம் சாப்பிட முடியாத நிலை - காதலா? இது அட்ரினலின் ஏற்படுத்துவது தான்!

கவர்ச்சியை விட மேலானது; தெய்வீகக் காதல்; ஒருவரை ஒருவர் அணைத்தவாறே அருகில் இருக்கத் தோன்றும் உணர்வு;

உலகம் உள்ள அளவு இருக்கும் காதல் உணர்வு இது, தெய்வீகக் காதல் என்கிறீர்களா? ஆக்ஸிடாசின் தான் இதற்குக் காரணம்!

பாதுகாப்பான உணர்வு; பரவசம்; தனியாக இல்லை; கூடவே ஒருவர்; பரஸ்பரம் காத்து அணைக்க ஒருவர் உள்ளார் என்ற ஆனந்தம்-காதலே இது என்கிறீர்களா? எண்டார்பின் செய்யும் வேலை இது!

பூ! இவ்வளவு தான் காதல் என்கிறது இதை அலசுகின்ற அறிவியல்!

# கர்ப்பம், பிரசவம் இல்லாமல் குழந்தை!

கதைகளிலும், காவியங்களிலும், சினிமாக்களிலும் ஏன் அன்றாட வாழ்க்கையிலும் தன் முத்திரையைப் பதிக்கும் செக்ஸ் காலத்தை வென்று நிற்குமா?

'செக்ஸ் இன் தி ஃப்யூச்சர்' என்ற புத்தகத்தை மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் ஜூவாலஜி துறையில் ரீடராகப் பணிபுரிந்த டாக்டர்.ராபின் பேக்கர் என்பவர் எழுதியுள்ளார்.

ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையான இவர், நூற்றுக்கும் மேலான அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளவர். பிரமிக்க வைக்கும் தன் முடிவுகளை துணிச்சலாக இவர் எழுதியுள்ளது உலக மக்களைத் திடுக்கிட வைக்கிறது.

"செக்ஸ் என்பது பிள்ளைகளைப் பெறுவதற்காகவே என்ற காலம் காலமாக இருந்து வரும் கொள்கை, இனி தரைமட்டமாகிப்போகும்" என்கிறார் இவர்.

1978-ல் முதல் டெஸ்ட் ட்யூப் பேபி புதிய முறையான இன்விட்ரோ பெர்டிலைசேன் முறைப்படி பிறந்தது. ஆணின் விந்தில் உள்ள உயிரணுக்களை கருத்தரிக்க இயலாத பெண்ணின் உடலில் அல்லாமல் வெளியிலே வைத்துக் கருவை வளர்ப்பது இந்த முறையில்தான். இதற்கு அடுத்தாற்போல சரோகேட் எனப்படும் 'பதிலித் தாய்' கருவைத் தன் கருப்பையில் வளர்ப்பது நடைமுறைக்கு வந்தது.

http://kalviamuthu.blogspot.com

ஆனால்... எதிர்காலத்தில்...?

ஆணோ, பெண்ணோ யாருமே வேண்டாம். கருவைச் சுமக்க ஒரு மெஷின் போதும். மனிதனால் தயாரிக்கப்பட்ட கருப்பையில் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் இரு ஆடுகள்தான் இதுவரை பிறந்துள்ளன.

ஆனால்... பிரபல டைம் பத்திரிகை 2022-ம் ஆண்டு செயற்கை கருப்பையில் 'முதல் குழந்தை' பிறக்கும் என்று தன் கணிப்பை வெளியிட்டுள்ளது.

இது மட்டும் உண்மையாக நடக்குமேயானால், பெண்கள் பிரசவ வேதனைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

ஒரு ஆணுக்கு ஆண்மைக் குறைவோ அல்லது நரம்புக் குழாய் அடைப்போ அல்லது குறைந்த ஸ்பெர்ம் எண்ணிக்கையோ எந்தக் குறைபாடு இருந்தாலும் இனி கவலை இல்லை. அதே போல பெண்ணை மலடி என்று யாராலும் கூற முடியாது.

இரு பாலருக்கும் என்ன குறைபாடு இருந்தாலும், தங்களுக்கே உரித்தான விந்து மற்றும் முட்டைகளை இணைத்து உடல் உறவில்லாமலேயே குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த முறை மூலம் 'திட்டமிடாமல்' பிறக்கும் குழந்தைகளைத் தவிர்க்க முடியும். மெக்கானிக்கல் மற்றும் கெமிக்கல் கருத்தரிப்பு சாதனைகளுக்கு ஒட்டு மொத்தமாக கல்தாதான்.

சிறு வயதிலேயே தங்கள் விந்துக்களை ஆண்கள் ஒரு விந்து வங்கியில் தந்து விட வேண்டும். அதேபோலப் பெண்ணும் தன் சினை முட்டைகளை அதற்குரிய வங்கியில் தந்துவிட வேண்டும். தேவைப்பட்டபோது, செயற்கை மெஷினில் குழந்தை வளரும்.

அறிவியல் தகவல்படி ஆணும், பெண்ணும் உறவு கொள்ளும்போது ஐநூறு முறைக்கு ஒரு முறைதான் கரு வளருகிறதாம்.

சிங்க இனத்திலோ 3000 முறைக்கு ஒரு முறைதான் சிங்கக் குட்டி உருவாகுமாம்.

இந்த புதிய நிலை என்னென்ன விளைவுகளை உருவாக்கும். ஒரு பெண் நோபல் பரிசு பெற்ற அறிவாளியின் விந்துடன் தன் முட்டையை இணைத்து, குழந்தை பெற விரும்பலாம். அல்லது, தனக்குப் பிடித்தவரின் விந்தணுக்களை வங்கியிலிருந்து வாங்கி குழந்தை பெறலாம்.

அப்படியானால், பிரபலங்களுக்கு வங்கியில் அவர்களின் விந்துக்கான தனி விலை கிடைக்கும். ஆனால்... குழந்தை பெற வேண்டியிருக்காது என்ற சுதந்திரத்தில் வரைமுறையற்ற உறவு, எய்ட்ஸ் போன்ற ஏராளமான பாலியல் நோய்களை உருவாக்கக் கூடும் என்றும் டாக்டர்.பேக்கர் அஞ்சுகிறார்.

http://kalviamuthu.blogspot.com

குளோனிங் முறையில் 'டாலி' என்ற ஆடு உருவானதைத் தொடர்ந்து மனிதனின் ஒரு செல் போதும் அவனை இன்னொரு ஜெராக்ஸ் காப்பி எடுக்க.

குளோனிங் முறையில் நூறு சதவிகிதம் மூல மனிதனின் அச்சாக இருப்பான். ஆனால்... ஆண், பெண் விந்து முட்டை சேர்க்கையில், ஆண் ஐந்து சதவிகிதம், பெண் ஐம்பது சதவிகிதம் என்ற விகிதத்தில் இருப்பதால் பிறக்கும் குழந்தையும் அதற்குத் தக்கபடி பிறக்கும்.

எதிர்கால குழந்தைகளுக்கு வியாதியே இருக்காது. ஆனால்... இப்படி 'ப்ளாக் பேங்க்' முறை மூலம் உருவாகும் குழந்தைகளை யார் வளர்ப்பார்கள்?

அதற்கென தனி சட்ட முறைகள், சமுதாய விதிகள், தானாக அமையும் என்கிறார் டாக்டர். ஒரு பெண் தன்னுடைய அறுபதாவது வயதில் கூட தன் இளமையில் தந்து, வங்கியில் அதற்குரிய குளிர்பதன சாதனத்தில் சேமித்து வைக்கப்பட்ட தன் முட்டை மூலம் குழந்தை பெறலாம்.

இப்படி உருவாகும் சமுதாயத்தில் 'பிறப்புத் தாய்', 'வளர்ப்புத் தந்தை' என்றெல்லாம் புதிய வார்த்தைகள் உருவாகும். மதம், மொழி, இனம் என்பதற்கெல்லாம் அர்த்தம் இல்லாமல் போய் விடும்.

ஐயையோ, அப்படி என்றால், வாழ்க்கை என்பதற்கு ஒரு அர்த்தமே இல்லாமல் போய் விடுமே என்று பலரும் அங்கலாய்க்கத் தொடங்கி விட்டனர்.

ஆனால்... டாக்டர். ராபின் பேக்கரோ அறிவியலின் இந்த புதிய வளர்ச்சி மூலம் எழும் பரிமாணம் தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, வரவேற்கப்பட வேண்டியதும் கூட என்று அடித்துக் கூறுகிறார்.

# இதோ கருத்தடைப் பட்டை! இனி வேண்டாமே மாத்திரைகள்!!

'வேண்டாம் இனி பிள்ளை' என்று எண்ணும் பெண்கள் கருத்தடை மாத்திரைகளையே உலகெங்கிலும் பரவலாக உபயோகிக்கின்றனர். ஆனால்... அதில் உள்ள ஒரு பெரும் குறை - பெண்களில் பலர் சில நாட்கள் அதைச் சாப்பிட மறந்து விடுவதுதான்.

விளைவு - இடைவிடாத பயம் - என்ன ஆகுமோ என்று! இந்த நிலையை நீக்க ஒரு வழியைத் தேடி வந்தனர் விஞ்ஞானிகள் இன்றுவரை!

அமெரிக்க மெடிக்கல் அசோஸியேஷனின் பத்திரிகையில் சமீபத்தில் வெளியான ஆய்வறிக்கையின் படி புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கருத்தடைப் பட்டை ஒரு நல்ல சாதனம்!

இது கருத்தடைப் மாத்திரைக்கான மாற்று வழி! இந்த புதுமுறைப்படி இந்த மிகச் சிறிய கருத்தடைப் பட்டையை தோளிலோ, கையிலோ, வயிற்றிலோ அல்லது இடுப்பின் பின் புறத்திலோ ஒட்டிக் கொள்ள வேண்டியதுதான் இதனுடன் நீச்சல் உட்பட அனைத்து காரியங்களையும் சுகமாகச் செய்யலாம்.

http://kalviamuthu.blogspot.com

இந்தப் பட்டை மெதுவாக ஆஸ்ட்ரொஜென் (Oestrogen) மற்றும் ப்ரொஜெஸ்ட்ரோஜென் (Progestrogen) ஹார்மோன்களை வெளிவிட்டுக் கொண்டே இருக்கும். இவற்றைத் தோல் உறிஞ்சிக் கொண்டே இருக்கும். கருவை உற்பத்தி செய்யும் ஹார்மோன்களின் ரத்த லெவலை கவனித்துக் கொண்டே இருக்கும் இந்த பட்டை அதைத் தடுத்து விடும். ஒரு வாரத்திற்கு ஒரு பட்டை! மூன்று பட்டைகள். நான்காவது வாரம் ஃப்ரீ!

3319 பெண்மணிகளிடம் சோதனை செய்யப்பட்டதில் 15 பேரே கருத்தரித்தனர். வெறும் 0.4 சதவிகிதம்தான்! கருத்தடை மாத்திரைகளை நினைத்தாலே கசந்து போகும் மாதர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். இது செலுத்தும் ஹார்மோன்கள் ஈரலை அடையாது என்பதால் பக்க விளைவுகள் ஏதும் ஏற்படாது என்ற உத்திரவாதம் வேறு இருக்கிறது!

ஆனால்... இந்தப் பட்டைகளை மற்றவர்கள் பார்க்கும் இடத்தில் அணிந்தால் கருத்தடைப் பட்டையை உபயோகிப்பதை மற்றவர்கள் அறிந்து கொள்வார்களே என சில பெண்மணிகள் அங்கலாய்க்கின்றனர். ஆனால்... அமெரிக்காவிலும் கனடாவிலும் புழக்கத்திற்கு வந்துவிட்ட இதற்கு நல்ல டிமாண்ட். பிரிட்டனிலும் இது அறிமுகப்படுத்தப்படுகிறது. 'பாதுகாப்பான கருத்தடை சாதனம்' என்ற பெயரோடு விற்பனையாகும் இதன் மாத செலவு 40 டாலர்களே! இது இந்தியாவிற்குள் நுழையும் நாளை 'மாத்திரை விரும்பாத மாதர்கள்' ஆவலுடன் எதிர் பார்க்கின்றனர்!

# மார்பகப் புற்றுநோய் இனி பயமில்லை...

அமெரிக்காவில் ஒன்பது பெண்களில் ஒருவருக்கு மார்பகப் புற்றுநோய் அறிகுறி தென்படுகிறது. நாற்பது வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு இந்நோய் சுலபமாக தொற்றிக் கொள்ளக்கூடியது. மார்பகப் புற்றுநோய் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் எளிதில் குணப்படுத்திவிட முடியும். இதை ஆரம்பத்திலேயே கவனிக்காமல் வளரவிட்டால் நுரையீரல் புற்றுநோய், ரத்தப் புற்றுநோய் போல் உயிரையே குடித்து விடும்.

மார்பகத்தை லேசாக அமுக்கும்போது வலி ஏற்பட்டால் அது மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான அறிகுறியாக இருக்கலாம். வெட்கத்தின் காரணமாக பெண்கள் இதை ஆஸ்பத்திரிக்குச் சென்று காட்டுவதில்லை.

மார்பகப் புற்றுநோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிய 'சீமன்ஸ் மம்மோமாட் 3000' என்ற கருவியை அமெரிக்காவில் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கருவியை மார்பகத்தில் பொருத்திவிட்டால் கையினால் அமுக்கி கட்டி இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதுபோல் இந்த 'சீமன்ஸ் மம்மோமாட் 3000' கண்டறிகிறது. ஆனால் இதைச் செயற்படுத்தும்போது கையால் அமுக்குவது போல் வலி ஏற்படுவதில்லை. தேவையான அமுக்கம் வந்தவுடன் டிஜிடல் கருவி போதும் என்ற சமிக்ஞை தருகிறது.

பத்தே நிமிடங்களில் இரு மார்பகங்களும் படம் எடுக்கப்படுகின்றன. அந்தப் படங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. சந்தேகம் இருந்தால் பயாப்ஸிக்கு அழைப்பு வரும். இல்லையேல் பயமில்லை.

http://kalviamuthu.blogspot.com

அமெரிக்காவில் கணவன்மார்கள் தங்கள் மனைவியின் பிறந்த நாளுக்கு 'மம்மோகிராபி' சென்டரில் செக் - அப் செய்யும் கிப்ட் கூப்பனைப் பரிசாகத் தருகிறார்களாம். இப்படி கிப்ட் செக் மூலம் ஒரு பெண் மார்பகச் சிகிச்சை செய்யப் போன இடத்தில், புற்றுநோய் அவருக்கு ஆரம்ப நிலையில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அவர் உயிர் காப்பாற்றப்பட்டு விட்டது.

சவுத் டென்வரில் இந்த மம்மோகிராபி சென்டர் திறக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளில், 1100-க்கும் மேற்பட்டோர் மார்பகத்தைப் பரிசோதித்துள்ளனர். வருடம் ஒரு முறை பத்து நிமிடம் மம்மோகிராபியோடு செலவழித்தால் மார்பகப் புற்று நோய் பயமின்றி வாழலாம்.

இந்தியாவுக்கும் இது விரைவில் வரவிருக்கிறது!

# மார்பகத்தை பாதுகாக்க டிப்ஸ்...

பெண்கள் மார்பகத்தைக் காக்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டது. கவர்ச்சிக்காக அல்ல; மரணத்தை தவிர்க்க!

பதினோரு பேரில் ஒருவருக்கு மார்பகத்தில் புற்றுநோய் வருவதாக அறிவியல் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. பிரிட்டனில் 'ஆஸ்ட்ரோஜன்' (OESTROGEN) ஹார்மோனின் சக்தியைத் தடுக்க, அடிக்கடி மார்பக 'செக் - அப்' செய்ய எல்லா வயதுப் பெண்களும் தயாராகி விட்டனர்.

இந்தியாவிலோ பழையகால 'டாபூ' வில் பெண்கள் வீழ்ந்து கிடக்க, மார்பக ஆட்கொல்லியின் பயங்கரம் கூடத் தெரியாது இருக்கின்றனர்.

மார்பகத்தைக் காக்க டிப்ஸ்...

- இளமையாக இருக்கும்போதே குழந்தை பெற்றுக் கொள்ளுங்கள். 30 வயதிற்கு மேல் மணமாகி குழந்தை பெறுவோர்க்கு டபிள் ரிஸ்க்!
- குழந்தைக்குக் குறைந்தபட்சம் ஆறு மாதமாவது தாய்ப்பால் கொடுங்கள். தாய்ப்பால் கொடுக்கும் போது சாதாரண 'ஓவலேடரி சைக்கிளை' உடல் அடக்குகிறது. இது உடல் நலத்திற்கு நல்லது. 18 வயதிற்கு மேல் 20 முதல் 25 கிலோ வரை எடை கூடினால் புற்று நோய் வரும் அபாயம் அதிகம். எடையைக் குறையுங்கள்.
- மறந்தும் மது பக்கம் போகாதீர்கள்.
- நவநாகரீகம் பரவி வரும் உலகில் புகை பிடிப்பதையும் தவிருங்கள்.
- உடல் பயிற்சி தினமும் தேவை. குறைந்த 'ஆஸ்ட்ரோஜன் லெவல்' அடைதல் மற்றும் 'ஓவலேடரி சைக்கிளின் ஃப்ரீக்வென்ஸியை குறைத்தல் போன்ற நன்மைகளைத் தருவது உடல் பயிற்சியே!' அரை மணி நேரப் பயிற்சி - வாரத்திற்கு மூன்று முறை போதும்!
- 'ஒரே டென்ஷன்' என்று புலம்புபவராக இருந்தால் உடனே ஓய்வு எடுங்கள். ஆழ்ந்து மூச்சை இழுத்து வெளியில் விடுவது உடம்பை ரிலாக்ஸ் ஆக்கும்.
- குழாய் நீர் உட்பட குளோரின் உள்ள அனைத்தையும் தவிருங்கள். ஆர்கனோ குளோரின்ஸ் என்னும் கெமிக்கலே மார்பகப் புற்று நோய்க்குக் காரணம் என்று ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கின்றன.
- பிளாஸ்டிக்கினாலான உணவுப் பாத்திரம் வேண்டாம். பிளாஸ்டிக் பாக்கிங்கும் வேண்டாம். பிளாஸ்டிக் உற்பத்தியில் ஆர்கனோகுளோரின் என்னும் கெமிக்கலே மார்பக புற்று நோய்க்குக் காரணம் என்று ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கின்றன.
- பழச்சாறை தயாரித்ததும் அருந்துங்கள். கனடிய ஆராய்ச்சி ஒன்று ஒரு டம்ளர் ஆரஞ்சு ஜூஸ் ஐம்பது சதவிகிதம் கான்ஸர் செல்லின் வளர்ச்சியைத் தடுக்கிறது என்று கூறுகிறது. கீரை வகைகளையும், வாழைத்தண்டு போன்ற நார்ச் சத்துக்களையும் அடிக்கடி உணவில் சேருங்கள். பைடோஎஸ்ட்ரோஜன்

http://kalviamuthu.blogspot.com

உள்ள இவை புற்று நோயைத் தடுக்கும் சக்தி வாய்ந்தவை.

- சோயா சாப்பிடுங்கள். ப்ளாண்ட் ஆஸ்ட்ரோஜன் மற்றும் ஐஸோப்ளாவோன்ஸ் உள்ள இவை மார்பகப் புற்று நோய் வராமல் காக்கும் கவசங்களாகும். சோயா உங்கள் 'பீரியடை' 28 நாட்களிலிருந்து 35 நாட்களாக ஆற்றும் வல்லமை படைத்தது!
- விட்டமின் ஏ,சி,ஈ மூன்றும் உடலுக்குத் தேவை. ஒரு மார்பகத்தில் வந்த புற்றுநோய் மறு பக்கம் பரவாமல் தடுக்க இத்தாலியில் விட்டமின் ஏ கொடுத்து பார்த்து, ஆராய்ச்சி செய்ததில் நல்ல பலன் இருந்தது.
- அதிகம் கொழுப்பு உள்ள உணவு வேண்டாம். 'செழிப்பான' வீடுகளின் அபரிமித உணவு தள தளப்பான மார்பகங்களையும் தருவதோடு நோயையும் தந்து விடும். கொழுப்பு வேண்டாம், ஜாக்கிரதை!
- தேவைப்படும் கொழுப்பையும் சரியாகத் தேர்ந்து எடுங்கள். மானோசாச்சுரேடட் உணவு வகை என்னும் எண்ணெய், புற்றுநோயை வருவதைப் பாதி தடுக்கும். ஆனால் பாலி-அன்சாசுரேடட் என்னும் கொழுப்பு உணவு வகைகளைத் (மீன், நண்டு போன்ற 'கடல் உணவு') தவிர்த்தல் நலம்.
- 'பெஸ்டிசைட்' மற்றும் "பெர்டிலைசர்' அற்ற உணவு தானியங்களை உபயோகித்தல் நல்லது.
- 'ஹார்மோன் ரீப்ளேஸ்மெண்ட் தெராபி' யைத் தொடர்ந்து எடுப்பதைத் தவிருங்கள். 'மெனோபாஸ்' சமயத்தில் இதைத் தொடர்ந்து எடுப்பது ரிஸ்க் என்று ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

http://kalviamuthu.blogspot.com

- 'கால்சியம் சான்ஸ் ப்ளாக்கார்ஸ்' எனப்படும் மாத்திரைகளை தவிருங்கள். அதிக ரத்த அழுத்தம், இதய நோய் இவற்றிற்கான மாத்திரைகளை ஜாக்கிரதையாக உபயோகியுங்கள்.

அடிக்கடி எக்ஸ்-ரே பிடிப்பதைத் தவிருங்கள். 'ரேடியேன்' அதிக ரிஸ்க்கைத் தரும்.

# மொபைல் போன்

**கர்ப்பிணிகளே - ஜாக்கிரதை**

பிறக்கவிருக்கும் குழந்தைகளுக்கு மொபைல் போன் தீங்கு விளைவிப்பது உறுதி என்கிறது அறிவியல் ஆய்வு ஒன்று. செல்போனிலிருந்து வரும் சிறிய அளவு கதிரியக்கமும் கூட கோழிக் குஞ்சின் கருவிற்கு தீங்கு விளைவிக்கிறது என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கோழிக்குஞ்சின் கருவும், குழந்தையின் கருவும் ஒரே மாதிரி அமைப்பு உள்ளவை என்பதால் விஞ்ஞானிகள் கர்ப்பிணிகள் செல்போன் உபயோகிக்க வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பல ஆய்வு முடிவுகளும், செல்போன் மூளை செல்களை நாசப்படுத்துகிறது என்று கூறுகின்றனர். 10,000 கோழிக்குஞ்சு கருக்களின் மீது விஞ்ஞானிகள் செல்போன் கதிரியக்கத்தைச் செலுத்தினர். அமெரிக்காவில் வாஷிங்டனில் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் தியோடர் லியோவிட்ஸ் "இந்தக் கருவியை உபயோகப்படுத்தினால் இரு மடங்கு. அசாதாரணமான விளைவுகள் ஏற்படுவதைக் கண்டுபிடித்தோம்" என்கிறார். "செல்போன் ரேடியேன் தாக்கியவுடன் செல்கள் தங்கள் பாதுகாப்பிற்காக 'ஸ்ட்ரெஸ் புரோட்டீனை' வெளிப்படுத்துகிறது. இப்படித் தொடர்ந்து இவற்றை வெளிப்படுத்துவது தீமையை விளைவிக்கும்" என்கிறார் டாக்டர் லியோவிட்ஸ்.

http://kalviamuthu.blogspot.com

இந்த ஆய்வு சென்ற வருடம் நடத்தப்பட்ட பிரெஞ்சு ஆய்வின் முடிவை உறுதிப்படுத்துகிறது. மொபைல் போன் நிறுவனங்கள் "இந்த ஆய்வு முடிவான ஒன்று இல்லை" என்று கூறிய போதிலும் விஞ்ஞானியும் மொபைல் போன் நிபுணருமான ரோஜர் காஹில் "இது கவலை அளிக்கக்கூடிய விஷயம்" என்கிறார்.

விஞ்ஞானிகள் மிகவும் லேசான எலக்ட்ரோ மாக்னடிக் பீல்டு கூட மூளையைச் சேதப்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றனர். உலக உடல் நல நிறுவனமான 'WHO' 40 லட்சம் பவுண்ட் நிதியை ஒதுக்கி மூளைக்கட்டி நோயால் பாதிக்கப்பட்ட 3000 பேரை ஆய்வுக்குட்படுத்தி இருக்கிறது. இவர்களது நோய்க்கும் மொபைல் போன் உபயோகப்படுத்தியதற்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா என்று கண்டுபிடிப்பதே ஆய்வின் நோக்கம்.

பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் சாதாரண பொது அறிவு சோதனைகள் நடத்தப்பட்ட போது மொபைல் போன் மூளை செல்களை உஷ்ணப்படுத்தி தீமை விளைவிப்பதைக் காண முடிந்தது.

எலிகளின் மீது நடத்தப்பட்ட சோதனைகள் 'ஸ்டரெயின் ஹார்மோன்கள்' அதிக அளவில் வெளிப்படுத்துவதைக் காட்டியது. ஆஸ்திரேலியாவில் அண்மையில் நடந்த சோதனைகளும் இந்த முடிவுகளை உறுதிப்படுத்துகின்றன. ஆகவே மொபைல் போனை யாரும் உபயோகிப்பது நல்லதல்ல. கர்ப்பிணிகளுக்கோ இது வேண்டவே வேண்டாம்.

# வேண்டாமே சிசேரியன்!

நல்ல நேரத்தில் குழந்தை பிறக்க வேண்டும் என்றோ அல்லது டாக்டரின் வற்புறுத்தலினாலோ சிசேரியன் செய்து குழந்தை பெற விரும்புவது நல்லதல்ல. இதை சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

பழைய நாட்களில் நம் இல்லங்களில் சுகப் பிரசவமாக இயல்பான இயற்கையான பிரசவத்தையே விரும்புவர். அதுவே சரி!

ஆராய்ச்சியாளர்கள் 845 குழந்தைகளின் பிறப்பு பற்றி ஆய்வு நடத்தினர். இந்தக் குழந்தைகளில் 147 குழந்தைகள் சிசேரியன் மூலம் பிறந்த குழந்தைகள். இந்தக் குழந்தைகளை விடாது ஒரு வருடம் ஆராய்ந்த டாக்டர்கள் 12 மாதம் கழித்து ரத்த சாம்பிளையும் எடுத்தனர்.

எதிரிக் கிருமிகள் உடலில் புகுந்து தாக்கும் போது அந்தக் குழந்தைகளின் நோய் தடுக்கும் சக்தி, உடலைக் காக்கும் புரோட்டீன்கள் எப்படி இருக்கிறது என்று ஆராய்ந்தனர். சாதாரண உணவு கூட அலர்ஜியை உண்டாக்குகிறது என்பதை அவர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

டயரியா, வயிற்றுவலி இவற்றால் குழந்தைகள் துன்பப்படுகின்றனவாம். இயற்கை பிரசவத்தின் போது தாயிடமிருந்து அனைத்தையும் இயற்கையாகப் பெறும் குழந்தைகள், சிசேரியன் ஆபரேஷனின் போது மருத்துவமனை சூழ்நிலையால் அங்குள்ள பாக்டீரியா நிறைந்த சூழ்நிலையில் பிறக்கின்றன. பிறப்பின்போது தாயின் வயிற்றில் உள்ள பாக்டீரியா சூழ இறங்கி வரும் போது உள்ள நிலை மாறுவதால் தான் இந்த அலர்ஜி! சாதாரண டெலிவரியைப் போல இரு மடங்கு அதிகமாக இந்த குழந்தைகளுக்கு ரியாக்ஷன் இருக்கிறது. ஆகவே வேண்டாமே சிசேரியன் குழந்தை!

http://kalviamuthu.blogspot.com

இயற்கை பிரசவமே இன்பமான பிரசவம்.

# ஏ டு இஸட் - உங்கள் கணவரை அலசுங்கள்

பெண்களுக்கு ஒரு நற்செய்தி. தங்களுடைய கணவர் எந்த டைப் என்று புரியாமல் தவிப்பவர்களுக்கு உதவியாக கீல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஸ்டீபன் வொய்ட் ஹெட் தனது 15 வருட ஆராய்ச்சிக்குப் பின்னர் 'ஏ டு இஸட் - ஆண்கள் பற்றிய கைட்' என்று புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார். 27 வகையாக ஆண்களைப் பிரிக்கும் ஸ்டீபன் ஒவ்வொருவரும் எப்படி இருப்பார்கள் என்பதை நன்கு விவரிக்கிறார். எதிர்காலத்தில் நியான்டர்தால் போன்ற ஆண்கள் இருக்க மாட்டார்கள் என்று கூறும் இவர் உங்களவரை நீங்களே அலசி ஆராயலாம் என்று கூறுகிறார்.

ஆண்களின் சில டைப்களைப் பார்க்கலாம்!

**அசில்லிஸ்:** நவீன நாகரிகவாதிகள். கவர்ச்சிகரமானவர்கள். ஆனால் இவர்களுக்கு தேவைகள் நிறையவே உண்டு.

**அடோனிஸ்:** தன் உடலைப் பற்றியே சதா சர்வ காலமும் நினைத்து அதை வெறி பிடித்தது போல நேசிப்பவர்.

**பேக்பேக்கர்:** செக்ஸ் மய அழகு ஆனால் அபாயமானவர்கள்; அன்றாட உறவு இருந்தால் போதும்!

http://kalviamuthu.blogspot.com

**பச்சோந்தி:** சூழ்நிலைக்கேற்றபடி இருப்பவர். ஸ்மூத் டைப். கவர்ச்சி உண்டு. ஆனால் நீங்கள் நினைக்கும் ஆள் இல்லை என்பதை உணர்த்தி விடுவார்.

**கூல் போஸர்:** ஃபான் பற்றியே நினைப்பவர்.

**கார்பொரேட் மேன்:** செக்யூரிடி இருந்தால் போதும், சொன்னபடி நடப்பவர்.

**கேட்ஜட் மேன்:** அதி நவீன டெக்னிகல் சாதனங்கள் மீது வெறி, கண் பார்வை குறைவு, தனிமையாக இருப்பவர், கூட்டம் என்றால் ஒதுங்குபவர்.

**கோமாளி:** சிரிப்பு என்றால் பிடிக்கும், கூட்டம் என்றாலும் பிடிக்கும். ஆனால் தனிமை இரக்கம் கொண்டவர்.

**லிப்-மேன்:** பெண்ணியத்திற்கு ஆதரவானவர், அரசியலில் சரியான பக்கம் இருப்பவர், நன்றாகப் படித்தவர்.

**ஆண்-குழந்தை:** வயது ஆகிக் கொண்டே இருக்கும்; நல்ல டேஸ்ட்கள் உண்டு; ஆனால் மதிப்பு கம்மி.

**மிஸ்டர் ஆங்கிரி:** மூடியான டைப், ஆவேசமானவர்; தன் செயல்கள் செய்யும் டாமேஜ் பற்றி தெரிந்து கொள்ளாதவர்.

**நியான்டர்தால்:** பழமை வாதி; தன்னைப் பற்றி மட்டும் சிந்திப்பவர், தீவிரமானவர்.

**ரிஸ்கர்:** துணிச்சல்காரர், வங்கிக் கணக்கில் ஓவர் டிராப்ட் இருக்கும்; தன் அதிர்ஷ்டத்தை தள்ளி முன்னேறிக் கொண்டே இருப்பார்.

**ரொமான்ஸர்:** பெண்களை காலமறிந்து ஈர்ப்பவர்; ஆனால் பெண்களைப் பிடிக்காது, அவர்களைத் தன் பக்கம் வர வைப்பார்.

**சிக்மண்ட்:** தன்னைப் பற்றிய சுய நம்பிக்கை இல்லாதவர்; ஆனால் பிறர் நம்பக்கூடிய ரகம். மற்றவர்களை அரவணைப்பவர்.

**ட்ரெய்ன் ஸ்பாட்டர்:** நடுத்தர வயதுக்காரர்; புள்ளி விவரங்களைச் சேர்த்துக் கொண்டே இருப்பார்.

**யூனிபார்ம் மேன்:** உணர்ச்சி பூர்வமாக உறுதி இல்லாதவர். கடினமானவர். அடிக்கடி கோபம் வரும்.

**ஜெபிடீ:** குழப்பவாதி; யாராவது ஒருவர் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். ரொம்பவும் பிஸியாக இருப்பார்.

இப்படி பல டைப்களில் உங்கள் கணவர் எந்த டைப்? நீங்களே முடிவு செய்து கொள்ளலாம். இவற்றைத் தவிர புது மாதிரியாக இருந்தால்...புதிய பெயர் கொடுத்து விடலாமே!

http://kalviamuthu.blogspot.com

# உடல் பேசும் மொழி

வெறும் வாய்ச்சொற்களால் மட்டும் நாம் நமது எண்ணங்களை வெளியிடுவதில்லை. உடலுக்கும் மொழி உண்டு. அதாவது 'பாடி லாங்வேஜ்' தனிச் சக்தி வாய்ந்தது. நாம் வெளிப்படுத்தும் எண்ணத்தின் தாக்கம் ஏழு விழுக்காடு பேசுகின்ற சொற்களால், மொழியால் ஏற்படுகிறது. 38 விழுக்காடு நமது குரல், ஏற்ற இறக்கம், தொனி ஆகியவற்றால் ஏற்படுகிறது! 55 விழுக்காடு சொற்கள் இல்லாமலேயே ஏற்படுகிறது.

இந்த 55 விழுக்காடை அதாவது பெரும்பகுதியை உடல் மொழி வெளிப்படுத்துகிறது. இந்த மொழியில் தேர்ச்சி பெற்றுவிட்டால் நம்மை வெல்ல யாராலும்முடியாது என்கிறது 'Be your best' என்னும் புத்தகம்.

ஏராளமான கேள்விகள், செக்லிஸ்ட், வரைபடங்கள் கொண்ட இந்தப்புத்தகம் சுய முன்னேற்ற நூல்கள் வரிசையில், சேர்கிறது. எந்த மாதிரியான அடிப்படை சிந்தனை உங்களுக்கு இருக்கிறது என்பதை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள் என்கிறது இந்த நூல்.

நமது மூளை நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வேலை உண்டு. தனித்தனி திறமை உண்டு. வலது பக்க முன் பகுதி படைப்பாற்றல், சிந்தனை, யோசனை ஆகியவற்றைத் தரும்; வலது பக்க அடிப்பகுதி உணர்ச்சிகளையும் உள்ளுணர்வையும் ஊட்டும். இடது பக்க முன் பகுதி தர்க்க வாதம் 'ரீஸனிங்' ஆகியவற்றை தரும் வல்லமை வாய்ந்தது. இடது பக்க அடிப்பகுதி நிர்வாகத்தைச் செம்மையாக்கச் செய்யும்.

http://kalviamuthu.blogspot.com

நம் அனைவருக்குமே இந்த நான்கு பகுதிகளும் உண்டு. 95 சதவீதம் பேர் இந்த நான்கு பாகங்களின் சில பகுதிகளையேனும் உபயோகிக்கிறோம். பொதுவாக ஆண்கள் மூளையின் இடப்பகுதியையும் பெண்கள் மூளையின் வலது பக்கத்தையும் உபயோகிக்கிறார்கள்.

ஏராளமான நமது எண்ணங்களை வெளிப்படுத்தும் வாக்கியங்களை அமைப்பதன் மூலம் நமது மூளையின் படத்தை நாம் வரைந்து விடலாம். சிந்தனை முறையை அமைப்பது என்றால் ஒரு வியத்தையோ, நிகழ்வையோ நாம் எப்படி நமது மூளை அதை ஏற்கக்கூடிய விதத்தில் அணுகச் செய்கிறோம் என்பதே ஆகும்.

பொதுவாக ஒத்த மூளைப்படம் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். ஆனால் தொடர்ந்த உறவு வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் நமக்குத் தேவையான விவரங்களைத் தரும் மூளைப் பகுதிகளை உபயோகிக்காமல் இருப்பதை அறிந்து அதை உபயோகிப்பவர்களின் உதவியை நாட விரும்பி வேறு மூளைப்படம் உள்ளவர்களையே நாம் தேர்ந்தெடுக்கிறோம்.

நமது மதிப்பீடுகளை நிலைநிறுத்த இந்த நூல் வெகுவாக உதவுகிறது. நமது மதிப்பீடுகளை மாற்றுவது கடினம். ஆகவே இவற்றின் விளைவுகளை நன்கு புரிந்து

கொள்ள வேண்டுமெனில் நமது வாழ்க்கையைத் தக்க விதத்தில் 'அட்ஜஸ்ட்' செய்து நமது மதிப்பீடுகளை தேவைக்கு ஏற்றபடி மாற்றி அமைத்து அமைத்து நேரத்தை அதற்காக செலவழிக்க முடியும்.

இந்தப் புத்தகம் நமக்கு ஒரு குரு. அதாவது வழிகாட்டி வேண்டும் என்று வலியுறுத்துகிறது. குருவின் அறிவுரை முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதோடு தேவையான தகுதிகளையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்ளவும் வழி வகுக்கிறது என்கிறது புத்தகம். இரண்டு காதுகளும் ஒரு வாயும் இருக்கிறது என்பதை உணர்ந்து அதே விகிதாச்சாரத்தில் அவற்றை உபயோகப்படுத்து என்பன போன்ற அழகான அறிவுரைகளை இதமாகத் தரும் இந்தப் புத்தகம் 'பெஸ்ட் செல்லராக' விளங்குகிறது!

http://kalviamuthu.blogspot.com

# நூறு வரும் வாழும் சூப்பர் மனிதன்!

ஆராய்ச்சியாளரும் சிறந்த விஞ்ஞானியுமான பேராசிரியர் எஸ்.ஜே.ஒல்ஷான்ஸ்கி தன்னுடைய குழுவினருடன் ஒரு சூப்பர் மனிதனை வடிவமைத்திருக்கிறார்.

நம்முடைய உடல் வயதாவதைத் தாக்குப் பிடிக்காமல் தளர்ந்து அழிகிறதே, அதன் காரணம் என்ன என்று ஆராயப் புகுந்தவர் தான் சூப்பர் மனிதனையும் கண்டுபிடித்து விட்டார்!

இயற்கை சாசுவதமான ஆரோக்கியத்திற்காக உடலை வடிவமைத்திருந்தால் - நூறு வயதிலும் திடகாத்திரமாக இருக்கும் படி உடலை அமைத்திருந்தால் அந்த உடல் எப்படி இருக்கும்? அதையும் அவர் ஒரு மாடலாக செய்து பார்த்து விட்டார்.

அந்த சூப்பர் மனிதனுடைய வயதான காலத்திலும் இளமை ததும்ப இருக்கும் வயோதிக வாலிபனுடைய படத்தைதான் அருகில் பார்க்கிறீர்கள்!

திருத்தி அமைக்கப்பட்ட கண்கள், பெரிய காதுகள், வளைந்த கழுத்து, சற்றே முன்னால் வளைந்து இருக்கும் உடம்பு, பாதுகாக்கப்பட்ட மூட்டு ஜாயிண்டுகள், நீளமான எலும்புகள், தசைகள்...இப்படி புதிய உடலுடன் "நூறை அடையலாம். இது தேவையா, என்பது உங்கள் மனப்பக்குவத்தைப் பொறுத்தது!

http://kalviamuthu.blogspot.com

ஒல்ஷான்ஸ்கி வடிவமைத்த இந்த உடல் 2001ம் ஆண்டு மார்ச் மாத, 'ஸயிண்டிபிக் அமெரிக்கன் பத்திரிகைக்காக வெகு கவனத்துடன் தயாரிக்கப்பட்டது. ஆனால் இதனால் ஹார்ட் அட்டாக், புற்றுநோய் இதையெல்லாம் தடுக்க முடியாது.

இவை வரவில்லை என்று வைத்துக் கொண்டால் நூறு ஆண்டுகள் கழிந்தாலும் உடல் வலுவுடன் இருக்கும் என்பதற்கு ஒல்ஷான்ஸ்கி காரண்டி தருகிறார்!

# ஹிட்லரின் சங்கேத மெஷின்!

எனிக்மா என்கோடிங் மெஷின் என்ற ரகசிய சங்கேதம் அனுப்பும் மெஷினை வைத்தே ஹிட்லர் தன் நாஜி படையினருக்கு ரகசிய ஆணைகளையும் தன் திட்டங்களையும் தெரிவித்து வந்தான். இது பதினைந்து லட்சம் கோடி சங்கேத முறைகளில் வேறு வேறாகச் செய்திகள் அனுப்பும் திறன் வாய்ந்தது. பிரிட்டிஷ் நிபுணர்கள் இது அனுப்பிய செய்திகளால் கதிகலங்கிப் போயினர்.

இரண்டாம் உலகப் போர் நடந்தபோது இந்த மெஷின் மூலம் அனுப்பப் படும் சங்கேதங்களை அவர்கள் இடைமறித்துக் கேட்பது வழக்கம். ஆனால் என்ன செய்தி அனுப்பப்படுகிறது என்று தெரியாது. இதைக் கண்டுபிடிக்க கணிதவியல் நிபுணர்கள் உள்ளிட்ட பல்துறை நிபுணர்கள் பத்தாயிரம் பேர் ப்ளெட்ஸ்லி பார்க் என்ற இடத்தில் வேலை செய்தனர்.

ஒரு நாள் ரேடியோ மூலம் சோம்பேறித்தனமாக ஒரு நாஜி இந்த மெஷின் மூலம் அனுப்பப்படும் சங்கேதம் தொலைந்து விட்டது என்பதற்காக சங்கேத மொழியை அப்படியே கூறி விட்டான். இதை அறிந்த பிரிட்டிஷ் நிபுணர்களுக்கு ஒரே கொண்டாட்டம். இதை வைத்தே ஜெர்மனி, கிரீஸ் மீது படையயடுப்பது, வட ஆப்பிரிக்காவில் கப்பல் மூலம் ரோமல் என்ற இடத்தில் சப்ளை வழங்க இருக்கும் நேரம் ஆகியவற்றை பிரிட்டன் அறிந்தது. இத்தாலிய பாதுகாப்பு, பிரான்ஸில் முக்கிய போர் நாளன்று எதிரி படைகள் இருக்கும் இடத்திற்கேற்ப பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகளையும் அது எடுத்தது.

http://kalviamuthu.blogspot.com

ஒரு டைப்ரைட்டர் அளவே இருக்கும் இது, போர் முடிந்த பின்னர் வெகு காலம் ப்ளெட்ஸ்லி பார்க்கில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த 2000மாவது ஆண்டு ஒரு நாள் இது திடீரென்று மாயமாக மறைந்தது. ஹிட்லர் இதே போன்று மூன்றே மூன்று மெஷின்கள்தான் வைத்திருந்தான். அவை உலகையே கதிகலங்க அடித்தன! 1967 வரை இப்படி ஒரு மெஷின் இருந்த சமாச்சாரத்தை பிரிட்டன் வெளியிடவே இல்லை! ப்ளெட்ஸ்லி பார்க்கிலிருந்து இது மறைந்தவுடன்தான் இதன் மதிப்பு மற்றும் மகிமையை உலகம் முழுவதும் அறிந்தது!

# ஹிட்லரின் தங்கப் புதையல்!

சுவாரசியமான தங்கப் புதையல் ஒன்றைத் தேடி நடக்கும் வேட்டை பற்றி உலகமே பரபரக்கிறது! அது ஹிட்லர் விட்டுச் சென்ற தங்கப் புதையல்!

ஆஸ்திரிய மலைகளின் ஊடே அடர்ந்த காடுகள் சூழ்ந்திருக்க, 56 வருட கால ரகசியத்தைத் தன்னுள்ளே அடக்கி மௌனமாக இருக்கும் டாப்லிட்ஸ் ஏரி, தங்கப் புதையலைத் தேடி அலைவோரை வா வா என அழைத்துக் கொண்டே இருக்கிறது.

அமெரிக்க கம்பெனியான 'ஒஷியானீரிங்' உட்பட பல நிறுவனங்களும், புதையல் வேட்டையாடிகளும் நவீன தொழில் நுட்பக் கருவிகளோடு டாப்லிட்ஸ் ஏரியை நோக்கிச் செல்லும் காரணம் என்ன?

இரண்டாம் உலகப் போரின் இறுதி நாட்கள், ஹிட்லரின் உளவுத்துறை அனுப்பிய பல லாரிகள் சீலிடப்பட்ட பெட்டிகளுடன் குறுகிய மலைத் தொடர் சாலை வழியே சென்றது. உளவுத்துறை தலைவர் கால்டன் பிரன்னரால் லாரிகளை உரிய இடத்திற்குக் கொண்டு செல்ல முடியவில்லை. நேச நாட்டுப் படையினர் நெருங்கி வந்ததே அதற்குக் காரணம். ஏரியில் பெட்டிகளைப் போடுமாறு உத்தரவிட்டார் அவர்.

அவ்வளவுதான், சில நாட்களிலேயே ஏரியில் புதையல் இருப்பதாக வதந்திகள் கிளம்பின.

http://kalviamuthu.blogspot.com

பயணத்தின் போது ஆக்ஸில் முறிந்து வழியிலேயே ட்ரான் நதி அருகே நின்று போன லாரி ஒன்றில் இருந்த பெட்டிகள் அனைத்தும் நதியில் தூக்கி எறியப்பட்டன. பெட்டிகள் உடைந்து, அதிலிருந்து ஆயிரக்கணக்கில் பிரிட்டிஷ் கரன்ஸி நோட்டுகள் ஏரி நோக்கி வந்தன.

மக்கள் வெள்ளம் திரண்டது. மீன் பிடிப்பதற்குப் பதிலாக நோட்டுகளைப் பிடிப்பதில் போட்டா போட்டி ஏற்பட்டது! பலருக்கு வாழ்க்கை அடியோடு மாறிப் போனது. ஏகப்பட்ட பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு கம்பீரமாக உலவிய அவர்களுக்கு அந்த பிரிட்டிஷ் நோட்டுகள் கள்ள நோட்டுகள் என்பது தெரியாது!

பிரிட்டனின் பொருளாதாரத்தை அடியோடு நாசமாக்க வேண்டுமென்று விரும்பிய ஹிட்லர் அதற்கான உத்தரவைப் பிறப்பித்தான். எஸ்.எஸ். என்ற ஹிட்லரின் உளவுத்துறை ஐந்து பவுண்ட் கள்ள நோட்டுக்களை அடித்து அதைப் புழக்கத்தில் விட்டு பிரிட்டனை நாசமாக்கத் தீர்மானித்தது.

பெர்லின் அருகே இந்த ஓரன்பர்க் சித்திரவதை முகாமில் கள்ள நோட்டு தயாரிக்கும் 40 திறமைசாலிகள் ஒருங்கு கூட்டப்பட்டனர். பல மாதப் போராட்டத்திற்குப் பிறகு ஜெர்மன் கெமிஸ்டுகள், பிரிட்டன் நோட்டுக்களில் உபயோகப்படுத்தப்பட்ட வண்ண கலவை விகிதத்தைக் கண்டு பிடித்தனர். 1941 மார்ச்சில் முதல் கள்ள நோட்டுக் கட்டு ஸ்விஸ் வங்கியில் தரப்பட்டது. அந்த நோட்டுகளைத் தந்த ஜெர்மானியர் அவற்றை கள்ள நோட்டுகள் என்று தாங்கள் சந்தேகிப்பதாகக் கூறினர்.

அனைத்து நோட்டுகளையும் ஆராய்ந்த வங்கி அதிகாரிகள் அந்த நோட்டுகள் அனைத்தும் ஒரிஜினல் தான் என்று சர்டிபிகேட் கொடுத்தனர். ஜெர்மன் அதிகாரிகள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். தங்கள் திறமையை மெச்சிக் கொண்டு கள்ள நோட்டுக்களை விசே அக்கறையுடன் தயாரிக்க ஆரம்பித்தனர். சுமார் 150 லட்சம் பவுண்ட் மதிப்புள்ள (இன்றைய மதிப்புப் படி சுமார் 1050 கோடி ரூபாய்) கள்ள நோட்டுகள் தயாரிக்கப்பட்டன.

ஆனால் இவ்வளவு பெரிய தொகையை எப்படிப் புழக்கத்தில் விடுவது? ஜெர்மன் அதிகாரிகள் யோசிக்க ஆரம்பித்தனர். ஆஸ்திரியாவில் டைரால் கோட்டையில் 20 ஜெர்மன் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். கள்ள பாஸ் போர்ட்டுகளுடன் உலவிய இவர்கள், ஐரோப்பா மற்றும் தென் அமெரிக்காவில் இந்த கள்ள நோட்டுகளைப் புழக்கத்தில் விட்டனர்.

கள்ள மார்க்கெட் வியாபாரிகளிடம் இவற்றைத் தந்து பதிலாக அமெரிக்க டாலர் நோட்டுகள், ஸ்விஸ் பிராங்குகள், வைரம், தங்கம் ஆகியவற்றைப் பெற்று பெட்டி பெட்டியாக பெர்லினுக்கு அனுப்பி வைத்தனர்.

போர் முடிவதற்கு முன்பு, 1945 மே முதல் தேதி அன்று இவர்களது வேலையை நிறுத்தச் சொல்லி கட்டளை வந்தது. அப்போது ஆஸ்திரியாவில் லின்ஸ் அருகே இருந்த சித்திரவதை முகாமிலிருந்து இந்தக் கள்ள நோட்டுகள் தயாரிக்கப்பட்டு வந்தன. இந்த வேலை நிறுத்தப்பட்டதோடு, கள்ள நோட்டு தயாரிக்க உதவிய பிரிண்டிங் மெஷின், ஸ்டாக் செய்யப்பட்ட பேப்பர், அடித்து புழக்கத்திற்கு விடத் தயாராக இருந்த கள்ள நோட்டுகள் அனைத்தும் அவசரம் அவசரமாக லாரிகளில் ஏற்றப்பட்டன. எந்த எந்த சீரியல்களில் நோட்டுகள் தயாரிக்கப்பட்டன போன்ற முக்கிய விவரங்கள் அடங்கிய லெட்ஜர்களும் பெட்டிகளில் வைக்கப்பட்டன.

http://kalviamuthu.blogspot.com

முதலில் மூன்று லாரி டிரக்குகளில் மேற்கு ஆஸ்திரியாவின் ஆல்ட் ஆஸிமலைத் தொடர் வழியே செலுத்தப்பட்டன. ஆனால் அவற்றில் ஒன்றுதான் டாப்ஸிட்ஸ் ஏரியை அடைந்தது. ஏரிக்கு 130 பெட்டிகள் படகு மூலமாக அனுப்பப்பட்டு ஏரிக்குள் எறியப்பட்டன.

கள்ள நோட்டுகளின் புழக்கத்தை அறிந்து கொண்ட பிரிட்டிஷ் உளவுத்துறை, அதை வெளி உலகிற்கு அறிவிக்கத் தயங்கியது. மாட்சிமை மிக்க பிரிட்டிஷ் கௌரவம் என்ன ஆவது? மேலும் கள்ள நோட்டு பீதி இங்கிலாந்து பொருளாதாரத்தையே சின்னாபின்னமாக்கி விடுமே!

ஆனால் 1950-ம் வருட வாக்கில் பத்திரிகைகள் பழைய வியத்தை ஆராய ஆரம்பித்தன. 1959-ல் ஜெர்மன் பத்திரிகையான ஸ்டெர்ன் தனது குழுவை அனுப்பி, ஏரியை ஆராயுமாறு பணித்தது. ஒரே ஒரு பெட்டியை குழு மீட்டது. அதன் உள்ளே கள்ள நோட்டுகள்! உடனே ஆஸ்திரிய அரசு அந்த ஏரிக்கு யாரும் போகக்கூடாது என்று தடை விதித்தது. 1963-ல் ஆஸ்திரிய அரசே ஏரியிலிருந்து 38 பெட்டிகளை மீட்டது. ஆனால் உள்ளே என்ன இருந்தது என்று மூச்சு விடவில்லை.

அடுத்த 27 ஆண்டுகளில் தேடுதல் வேட்டை பலமானது. நாஜிக்களின் மீது எப்போதுமே இரக்கம் காட்டும் ஆஸ்திரியா நீருக்கடியில் பெட்டிகளை ஒளித்து

வைத்திருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால் ஏரியோ 100 அடி ஆழம். அதன் தரையை யாராலும் பார்க்கமுடியவில்லை. பனிக்காலத்தில் உறைந்து போன நதி, வெயில் காலத்தில் பனி உருகி பிரவாகமாகப் பெருக்கோடி வரும்போது மரங்களை அடித்துக் கொண்டு வரும். அவை அனைத்தும் ஏரியின் அடியிலேயே புதையுண்டு போயின. சக்தி வாய்ந்த டைனமைட் கூட அவற்றைப் பிளக்க முடியவில்லை! டைவ் அடிக்கும் நீச்சல் வீரர்கள் கூட ஏரியின் அடிப்பகுதிக்குப் போக முடியவில்லை. ஆகவே நவீன தொழில் நுட்பக் கருவிகளுடன் ஓஷியானீரிங் நிறுவனம் போன்ற கம்பெனிகள் டாப்லிட்ஸ் நோக்கி விரைந்தன.

ஆனால் ஹிட்லரின் தங்கப் புதையலை இன்னும் முழுமையாக மீட்டபாடில்லை; மர்மமும் துலங்கிய பாடில்லை! அறுபது வருடங்களுக்கு பின் இந்த தேடுதல் வேட்டை இப்போது அதிகமாகி உள்ளது.

http://kalviamuthu.blogspot.com

# ஷீபா ராணியைத் தேடி…

பல நூற்றாண்டுகளாகத் தேடி வரும் தங்க ராணியான பேரழகி ஷீபா உண்மையிலேயே இருந்தாள் என்பதற்கு ஆதாரம் கிடைத்து இருக்கிறது.

பைபிளில் வரும் ஒரு குறிப்பு அந்தப் பேரழகி, சாலமனை பல நூறு தங்கக் கட்டிகளுடனும் ஏராளமான ரத்தினக் கற்களுடனும் நாடிப் போனாள் என்கிறது. இஸ்ரேலின் அரசன் மூலம் பிறந்த மகனே எத்தியோப்பிய அரச பரம்பரையை ஸ்தாபித்தான் என்கிறது வரலாறு.

அவளது புராதனமான வரலாறு பல ஆயிரக்கணக்கான இசை வல்லுநர்களையும் அறிஞர்களையும் உத்வேகப்படுத்தியதோடு ஹாலிவுட் புரட்யூசர்களையும் விடவில்லை.

“சாலமன் அண்ட் ஷீபா’ என்ற திரைப்படம் 1959-ல் வெளியானபோது உலகமே அதைப் பார்த்தது. அதில் கனவுக்கன்னி ஜினா லோலா பிரிகிடாவும் யூல் பிரைனரும் நடித்திருந்தனர்.

இப்போது ஏமன் என்று அழைக்கப்படும் நாட்டில் அகழ்வாராய்ச்சிகள் தொடங்கின. அது புராதன நாட்களில் மாரிப் என்று அழைக்கப்பட்டது. அதன் வழியே செல்லும் ஒட்டகங்கள் முத்து, வைடூரியம், வைரம், தங்கக் கட்டிகள் உள்ளிட்ட ஏராளமான செல்வங்களை எடுத்துச் செல்லும். அங்கே மாரிபை அரசாண்ட ராணி ஷீபாவிற்கு இதில் பெரும்பாலான சொத்து சேரும்.

http://kalviamuthu.blogspot.com

இந்தச் செல்வத்தைத் தேடிப் போன ஆராய்ச்சியாளர் அலெக்ஸாண்ட்ரா போர்டர், மாரிப் ஆலயத்தைக் கண்டு அங்கிருந்த பொக்கிங்கள் இருந்ததற்கான ஆதாரங்களைக் கண்டார். கிறிஸ்துவுக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஷீபாவின் அரண்மனை; கிறிஸ்துவுக்கு ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின் மணலில் புதையுண்டு போனது.

பிரான்ஸை சேர்ந்த ஆராய்ச்சியாளரான தாமஸ் ஆர்னர்ட் 1843-ல் இந்த இடத்தைக் கண்டு பிடித்தார். ஆனாலும் 1951-ல் தான் வெண்டல் பிலிப்ஸ் என்பவர் இதைத் தோண்டிப் பார்க்க ஆரம்பித்தார். ராணியின் பொக்கிங்களின் சில பகுதிகளைக் கண்ட அவர் அத்தோடு வெங்கலம் மற்றும் வெண்கற்களாலான அழகிய சிலைகளையும் ராணி வாழ்ந்த நீரூற்றுடன் கூடிய அரண்மனை வளாகத்தையும் கண்டார்.

ஆனால்…இவரது குழுவினரை உள்ளூர் போலீசார் கொலை செய்யப்போவதாக மிரட்டவே தனது ஆராய்ச்சியைப் பாதியில் விட்டுவிட்டு ஓடிப்போனார் வெண்டல்.

பாலைவனப் புயலால் இவர் கண்ட இடத்தை மீண்டும் மணல்மேடு மூடிவிட்டது. 1994-ல் யேமன் நாட்டு ஜனாதிபதி ஒரு வழியாக உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். இதற்குள் பிலிப்ஸ் காலமாகி விடவே அவரது சகோதரி மெரிலின் அங்கு தன் சகோதரர் விட்ட ஆராய்ச்சியைத் தொடர்ந்தார். கூடவே டாக்டர் வில்லியம் க்ளாண்ட்ஸ்மேன் என்பவரும் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டார்.

தரையை ஊடுருவிப் பார்க்கும் நவீன ராடார் கருவிகள் கொண்டு வரப்பட்டன. ஆயிரக்கணக்கான கலைப் பொருட்களையும், மண் பாண்டங்களையும் வெங்கலப் பொருட்களையும் இக்குழு எடுத்தது. “முழு பொக்கிஷத்தில் ஒரு சதவிகிதமே கிடைத்திருக்கிறது” என்கிறது ஆராய்ச்சிக் குழு.

ராணியைப் பற்றி மேலும் அறிய ஹீப்ரு மொழியில் சாலமனைப் பற்றியும் ஷீபாவைப் பற்றியும் உள்ள குறிப்புகளைப் படிக்க ஆரம்பித்துள்ளது குழு. ஆனால்...புயல் காற்றால் மாறி மாறி அமையும் மணல் மேடுகள் போல ராணியின் சரித்திரமும் மாறி மாறிக் கிடைக்கும் செய்திகளால் அல்லாடுகிறது.

ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட தகவல்களுடன் ராணியின் பெரும் பொக்கிஷத்தைத் தேடி ஆராய்ச்சியைத் தொடர்கிறார் டாக்டர் க்ளாண்ட்ஸ்மேன்.

“நாடோடிக் கதைகளில் எள்ளளவேனும் உண்மை இருக்கத்தான் செய்கிறது” என்று கூறும் டாக்டரை உலகமே, “ஷீபாவின் தங்கப் புதையலைக் கண்டுபிடித்து விட்டேன்” என்று அவர் சொல்லும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

http://kalviamuthu.blogspot.com

# விந்தை மனிதர் செஷைர்

செஷைர் என்னும் விந்தை மனிதர் மிக மிக கருணை உள்ளத்தோடு இங்கிலாந்தில் போரில் ஊனமுற்ற படை வீரர்களுக்காகவும், போரில் உயிரிழந்த வீரர்களின் விதவைகள் வாழவும் ஒரு இல்லத்தைத் துவக்கினார்.

லீசெஸ்டரில் சுமார் 2000 ஏக்கர் பரப்பில் துவக்கப்பட்ட அது, ஒரு சோதனையாக மாறியது. எந்த பில்லுக்கும் பணம் வழங்க முடியவில்லை. இந்த நிலையில்தான் பெரிய கோடீஸ்வரரான ஆர்தர் டைக்ஸ் என்பவர் கல்லீரல் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர். செஷைர் இல்லத்திற்கு வந்து, "எனக்கு இங்கே இடம் உண்டா?" என்று கேட்டார்.

உடனே அவரை அழைத்தார் செஷைர்.

அடுத்து அவர், "என்னைப் போலவே தேவைப்படும் அனைவருக்கும் உங்கள் இல்லம் இடம் கொடுக்குமா?" என்று கேட்டார்.

அவரது கேள்வி செஷைரின் உள்ளத்தில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியது.

பின், நாடெங்கும் இல்லங்களை அமைக்கத் தொடங்கினார். ரோமன் கத்தோலிக்கப் பிரிவில் அவர் தீவிர ஈடுபாடு உள்ளவரானார். இங்கிலாந்தில் 140 இல்லங்களை அமைத்துவிட்டு, வெளிநாடுகளில் சுமார் 240 இடங்களில் புதிய திட்டங்களை ஆரம்பித்தார்.

http://kalviamuthu.blogspot.com

இந்த நிலையில்தான், இந்தியா அவரைக் கவர்ந்தது. பண்டிட் நேரு அவர்களைச் சந்தித்து, இடம் கேட்டார். தேவைப்பட்ட இடத்தை நேருஜி மனம் உவந்து அளித்தார்.

இந்த நிலையில்தான் ஒரு புதிய துணை அவருக்குக் கிடைத்தது. அவரை விட ஆறு வயது இளையவரான ஸுரைடர் என்ற பெண்மணி அவருடன் சேவை செய்ய இணைந்தார். சீக்கிரமே இருவரும் ஒருவர் பால் ஒருவர் கவரப்பட்டு, மும்பையில் திருமணமும் நடந்தது. இரு குழந்தைகளும் பிறந்தன.

தனது 70-ம் வயதில் கூட இன்னும் பிரமாண்டமான திட்டங்களை செஷைர் போட ஆரம்பித்தார். ஆனால்... அவருக்கு மோட்டார் நியூரான் நோய் பற்றியது. 1992-ம் ஆண்டு தனது 75-ம் வயதில் ஹார்ட் அட்டாக்கினால் செஷைர் இறந்தார்.

சுமார் 3000 இரங்கல் செய்திகள் தேசத் தலைவர்களில் ஆரம்பித்து, தொழு நோயாளிகள் வரை அனைவரிடமிருந்தும் வந்தன. 20 நாடுகளில் இன்று செஷைர் இல்லங்கள் தொண்டு புரிந்து வருகின்றன.

இப்படி கருணை உள்ளத்தோடு செயல்படும் இந்தத மனிதர் யார் தெரிகிறதா?

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானின் நாகசாகி நகரில் 40,000 அப்பாவி மக்களின் உயிரை சில விநாடிகளில் பறித்து, அந்த நகரையே சுடுகாடாக்கிய, அணு குண்டு வீசிய விமானத்தை ஓட்டிச் சென்ற விமானி செஷைர்தான் இவர்.

நாகசாகி நகரில் குண்டு விழுவதை நேரில் பார்த்தவர் செஷைர். அந்த பாதிப்பைப் பார்த்து, மனநலம் பாதிக்கப்பட்ட இவர், அதற்கு பிராயச்சித்தமாகத்தான் மேற்குறிப்பிட்ட பணியில் ஈடுபட்டார்.

http://kalviamuthu.blogspot.com

# கில்லடின் கதை

மரண தண்டனை நிறைவேற்ற கில்லடின் என்ற தலை வெட்டி மெஷினைக் கண்டு பிடித்து அதற்கு முதல் பலியானவர் 'கில்லடின்' என்பதை நாம் கேள்விப் பட்டிருப்போம்.

அவரது இயந்திரத்தின் கதை என்ன?

பிரெஞ்சு புரட்சியின் போது ஏற்பட்ட மக்கள் அசெம்ப்ளி மரண தண்டனை விதிக்கப்பட்ட அனைவரது தலையும் துண்டிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டது.

இந்த நிலையில்தான் டாக்டர் கில்லடின் ஒரு புதிய தலைவெட்டி இயந்திரத்தைக் கண்டுபிடித்திருந்தார். சுழலும் பிளேடு தலை வெட்டுவதை விட, நீளமான கத்தியின் நுனி 45 டிகிரி கோணத்தில் இருந்தால் வெட்டுவது சுலபம் என்று அவர் நினைத்தார்.

அவரது இந்த புதிய இயந்திரன் பாரிஸ் மக்களைப் பெரிதும் கவர்ந்து விட்டது. 1792-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் தேதி, முதலாவது தலை வெட்டுதல் நிகழ்ச்சி, அன்றிலிருந்து 80 முதல் 90 பேர் அடங்கிய மரப்பெட்டிகள் பொது மைதானத்திற்கு அனுப்பப்பட்டுக்கொண்டே இருந்தன. அந்தந்த மைதானத்தில் நிறுவப்படும் கில்லடின் இயந்திரத்தில் சுமார் 17000 பேர்களின் தலைகள் வெட்டப்பட்டன.

http://kalviamuthu.blogspot.com

புரட்சிப் பெண்கள், வெட்டப்படும் தலைகள், விழுவதற்கான கூடைகளைச் செய்து அதன் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்களாம். வெட்டப்படும் பிரபுவின் பெயர் அவரது கோட்டில் எழுதப்பட்டிருக்கும்.

நம் நெஞ்சத்தைக் சிலிர்க்க வைக்கும் இந்த 'கில்லடின் வெட்டு' இப்போது மிகக் கொடூரமானதாகக் கருதப்பட்ட போதிலும் அப்போது மிக கருணையுடன் கூடிய முறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட வைக்கும் முறையாக அனைவராலும் கருதப்பட்டது.

88 அங்குல நீளமுள்ள கத்தியின் எடை 40 கிலோ. ஒரு வினாடியில் ஐம்பதில் ஒரு பகுதியே தலை மீது கத்தி பட்டு கீழே இறங்குவதற்கான நேரமாக இருந்தது. கத்தி பாதி வழியில் ஜாம் ஆகி விடாமல் இருக்க ஸ்பிரிட் லெவல் பார்த்து வைக்கப்பட்டது. ஒரு மரணம் முடிய ஏழு வினாடிகள்தாம். ஆனால்... இன்றைய நவீன முறையான லெதல் இஞ்செக்ன் முறைப்படி மரண தண்டனை முடிய பத்து நிமிடங்கள் வரை ஆகிறது.

இதை இயக்கி உலகத்தில் இன்றும் கில்லடின் சம்பந்தமாக உயிர் வாழும் ஒரே மனிதர் ஃபெர்னாண்ட் மைசனாயர். 1974-லிருந்து 1977 வரை மரண தண்டனை நிறைவேற்றுபவராக இருந்தவர் இவர். 200 பேரை முடித்தவர் இவர்.

"சில பேர் அழுதும் அரற்றியும் வருவார்கள். சிலரோ வெளிறிய முகத்துடன் பயத்துடன் வருவார்கள். இரண்டு வினாடிகளில் கதை முடிந்து விடும்" என்கிறார் இவர்.

இவரது பதினாறாம் வயதில் இவரது அப்பா, "மரண தண்டனையை பார்க்க ஆசையா?" என்று கேட்டார். மரண தண்டனையை நிறைவேற்றும் பரம்பரைத் தொழிலில்

ஈடுபட்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்த இவர், அன்றிலிருந்து இதில் ஈடுபட்டார்.

பிரான்ஸில் கடைசியாக பொது இடத்தில் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனை 1939-ம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் தேதி நிறைவேற்றப்பட்டது. இதைப் பார்க்க பயங்கர கூட்டம். பத்திரிகைகளில் முதல் பக்கச் செய்தி இதுதான். காட்டு மிராண்டித் தனமான உணர்வு இது என்று அரசு கருதியது. ஒரே வாரத்தில் ஒரு சட்டம் அமுலுக்கு வந்தது. மரண தண்டனை சிறைக்குள்ளேயே மிகக் குறைந்த பேர்களின் முன்னிலையில் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும் என்று.

இதனால் கில்லடின் புகழ் மங்கத் தொடங்கியது. மரண தண்டனையை முதலில் கில்லடினில் நிறைவேற்றியவர் அனடோல் டெய்ப்ளர் ஆவார்.

பாரிஸ் மெட்ரோ ரயில் நிலையத்தில் ஹார்ட் அட்டாக் வந்து இறந்தார் இவர்.

http://kalviamuthu.blogspot.com

# உலகின் முதல் அணுகுண்டைப் போட்டவர்!

உலகின் சரித்திரத்தையே ஒரு நொடியில் தம் விரல் நுனியால் மாற்றியவர் தாமஸ் வில்ஸன்ஃபெர்பி (Thomas Wilson Ferebee) தமது 81-ம் வயதில் இந்த ஆண்டு மார்ச் மாதம் 16-ஆம் தேதி மறைந்தார் இவர்.

யார் இந்த ஃபெர்பி?

இரண்டாம் உலக மகா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அணுகுண்டைப் போட்டவர் இவர்தான்!

1945-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ஆம் தேதி காலை 8.15 மணிக்கு அமெரிக்க B-29 பாம்பரான எனோலா கே என்று பெயர் சூட்டப்பட்ட குண்டு போடும்விமானத்தில் பறந்து ஹிரோஷிமா மீது அணுகுண்டைப் போட்டார் இவர். விரல் நுனியால் பட்டனை அமுக்க 70,000 ஜப்பானியர் இருந்த இடம் தெரியாமல் அழிந்தனர்.

அதைப்பற்றி ஒரு நாள் கூடக் கவலைப்பட்டதில்லை இவர்!

“உலகப்போரை முடிவுக்கு கொண்டு வர உதவி செய்தது அணுகுண்டுதான். யுத்தத்தினால் தான் தூக்கம் இல்லாது போனது. ஆனால் இந்த அணுகுண்டோ உலகில் சமாதானத்தைக் கொண்டு வந்தது. அணுகுண்டு மூலம் சரணாகதி அடைய ஜப்பான் நிர்ப்பந்திக்கப்படாமல் மட்டும் இருந்திருந்தால் அதன் மீது நில மார்க்கமாக அமெரிக்கா படை எடுத்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கும். அப்போது அமெரிக்கத் தரப்பில் ஒரு லட்சம் பேரும், ஜப்பானியர் ஒரு லட்சம் பேரும் உயிர் இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்” என்றார் ஃபெர்பி.

http://kalyiamuthu.blogspot.com

அணுகுண்டு போடும் பணிக்கு ‘லிட்டில் பாய்’(Little Boy) என்று பெயர் சூட்டப்பட்டது.

அடுத்து நாகஸாகி மீது இன்னொரு அணுகுண்டு போடப்பட்டவுடன் ஜப்பான் சரணாகதி அடைந்தது.

ஃபெர்பி அமெரிக்காவில் உள்ள வட கரோலினாவில் பிறந்தவர். 1940-இல் அமெரிக்க விமானப் படையில் சேர்ந்தார். ஐரோப்பா, வட ஆஃபிரிக்கா ஆகிய இடங்களில் குறி தவறாமல் குண்டு போடப் பழகிய இவரைத் தான் முதல் அணுகுண்டைப் போட அமெரிக்கா தேர்வு செய்தது.

பனிரெண்டு பேர் அடங்கிய குழுவில் திறமைசாலியான இவர் இணைக்கப்பட்டார். இலக்கை நோக்கி எனோலா கே போகும் போது கூட, தங்கள் பணியின் முக்கியத்துவத்தை இவர்கள் அறியவில்லை. ஒரு விசேஷப் பணி நிமித்தம் நீங்கள் செல்கிறீர்கள் என்று இவர்களிடம் சொல்லப்பட்டது. எந்தப் பணிக்குப் போகும் போதும் சொல்லப்படும் வழக்கமான பல்லவியே இது என்று எண்ணி இதன் முழு அர்த்தத்தையும் அவர்கள் உணரவில்லை.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயணம் பற்றி ஃபெர்பி கூறுகிறார்:

“எங்களுக்குக் கண்களைப் பாதுகாக்க காகிள்ஸ் தரப்பட்டது. ஒரு நொடியே நீடிக்கும் சூரியனை விட அதிக பிரகாசமாக இருக்கப்போகும் ஒளியிலிருந்து இது உங்களைப் பாதுகாக்கும் என்று சொன்னார்கள். ஆனால் பணிக்கு இடையூறாக இருக்கும் என்று எண்ணிக் காகிள்ஸை நான் அணியவில்லை. 13 மணி நேரம் பறந்து சென்று இலக்கு இடத்தை அடைந்தோம். ஹிரோஷிமாவில் உள்ள நதியின் நடுவில் உள்ள பாலத்தின் மீது பறந்தோம். சரியாகப் பார்த்து பாலத்தின் நடுவில் அணுகுண்டு போட வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்தோம். இடம் வந்தவுடன் “லிட்டில் பாயை ரிலீஸ்’ செய்தேன். விரலால் பட்டனை அமுக்கியவுடன் நேராகக் குண்டு கீழே சென்றது.

http://kalviamuthu.blogspot.com

# வினாடிகளுக்குப் பின்னர் குண்டு வெடித்தது

ஃபெர்பி குண்டு வெடித்ததைப் பார்க்கவில்லை. விமானத்தை வெகு வேகமாகத் திருப்ப வேண்டியிருந்தது. 11 மைல் தூரம் சென்ற பின்னர் திரும்பிப் பார்த்த போது பெரும் புகை மண்டலம் தெரிந்தது. நாய்க்குடை வடிவில் இருந்த புகை மண்டலம் வானை அளாவி வெகு உயரம் எழுந்தது. பிறகு நாய்க்குடை இரண்டாகப் பிளந்தது.

தளத்திற்கு திரும்பியவுடன் ஒரு பிரிகேடியர் ஜெனரல் வந்து, "நீங்கள் முதல் அணுகுண்டைப் போட்டதாக ஜனாதிபதி இப்போது தான் அறிவித்தார்" என்றார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் ஃபெர்பி டிஸ்னி வோர்ல்டு அருகில் உள்ள விண்ட்மீர் என்ற இடத்திற்கு வந்தார். எஸ்டேட் ஏஜெண்டாக வேலை பார்த்த அவர், படகு செலுத்துவதிலும் கோல்ஃப் விளையாடுவதிலும் நேரத்தைச் செலவழித்தார்.

இவர் காலமானதை அடுத்து இனி அணு குண்டு போட்ட குழுவினரில் மீதம் இருப்பவர் நான்கே பேர் தான். விமானி பால்டிப்பெட்ஸும் இந்த நால்வருள் ஒருவர். குண்டு போடும் விமானத்திற்குத் தம் தாயாரின் பெயரான எனோலா கேயைச் சூட்டியவர் விமானி பால்!

http://kalviamuthu.blogspot.com

# கல் வட்டம்

ஐரோப்பாவின் கற்காலத்தைய அதிசயங்களில் முக்கியமானது ஸ்டோன் ஹெஞ்சில் உள்ள கல்வட்டம்! இது பழமையானதும் கூட! கிறிஸ்து பிறப்பதற்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னரே இது அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. தென்மேற்கு வேல்ஸில் உள்ள ப்ரெஸ்லி மலைகளிலிருந்து 250 மைல் தூரத்தில் உள்ள கல் வட்டத்தில் பெரும் கற்கள் வட்ட வடிவில் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு கல்லின் உயரமும் சுமார் 25 அடி இருக்கிறது. எடையோ 40 டன்கள். இதை எப்படி யார் நகர்த்திக் கொண்டு வந்து சேர்த்தனர் என்பதுதான் மர்மம்! அது ஒரு வானவியல் கூடமோ, (ஆப்ஸர்வேடரியா) சடங்குகள் நடத்தும் கூடமா, பழைய கால அரண்மனையின் சிதிலயமா, அல்லது பழைய காலப் பண்பாட்டின் நினைவுச் சின்னமா? என்னவென்றே புரியவில்லை.

இங்கிலாந்தின் பழைய பண்பாட்டின் நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இந்த கல் வட்டத்தைப் பார்க்க தினமும் அனுமதி உண்டு. நேரம் மட்டும் சீஸனைப் பொறுத்து மாறுபடும். பெரியவர்களுக்கான நுழைவுக்கட்டணம் சுமார் 280 ரூபாய்.

http://kalviamuthu.blogspot.com

# கல்மரங்கள்

'நீ கல்லாகக் கடவது' என்று ராஜா - ராணிக் கதைகளிலும், புராணங்களிலும் (பாவம், அகலிகை) ரிஷிகளின் சாப வார்த்தைகளைக் கேட்டிருக்கிறோம்.

ஆனால் கல்லாக இருக்கும் மரங்களை, வட அமெரிக்காவில் அரிஜோனாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள பாலைவனத்தில் பார்க்கும் போது பிரமிப்புதான் வரும்.

20 கோடி வருடங்களுக்கு முன்பு அழகிய சமவெளியாக இருந்து இந்த இடத்தில் டைனோசர்கள் உட்பட பல மிருகங்களும் உலவி வந்தனவாம். ஊசி இலை மரங்களின் நடுவே டைனோசர்கள் நடை போட, பைடோசரஸ் என்னும் 'நீர் ராஜா' (பெரிய முதலை போன்ற இனத்தைச் சேர்ந்தது) தனது நீண்ட மூக்கால் 10 அடி நீளமுள்ள நில நீர் பிராணிகளை அலாக்காகத் தூக்கி விழுங்கிவிடும். இப்போதைய ஹிப்போபொடாமஸை விடப் பெரியதாக இருந்த இதன் எடை அரை டன்!

லெப்டினண்ட் லோரன்ஸோ சிட்கிரீவ்ஸ் என்னும் ராணுவ அதிகாரி 1851-ல் இந்த இடத்தைக் கண்டுபிடித்தார்.

100 அடி உயரத்துடன் அசல் மரம் போலவே இருந்த கற்கள் அவரை வியப்பில் ஆழ்த்தின.

http://kalviamuthu.blogspot.com

"இயட்ஸோ என்ற புராண ராட்சஸனின் சிதறிய துண்டுகள்தாம் இந்த மலைத் தொடரில் உள்ள கல் மரங்கள்" என்று அங்குள்ள ஆதிவாசிகளான நவாஜோ இந்தியர்கள் கூறுகின்றனர்.

ஆனால் ஆராய்ச்சியோ வேறுவிதமான காரணத்தை விளக்குகிறது.

அது 20 கோடி வருடங்களின் பரிணாமக் கதை!

மிக பிரமாண்டமான 100 அடி உயரமும், ஆறரை அடி விட்டமும் உள்ள ஆயிரக்கணக்கான மரங்கள் ஊசி இலைக் காடுகளாகப் பரிணமிக்க, இதை விட இரு மடங்கு உயரமும் அகலமும் உள்ள மரங்களின் தொடர் வரிசைகள் 150 சதுர மைல் பரப்பளவு பரவி இருந்தனவாம்.

காலவெள்ளம் ஓட, நிஜமான நீர் வெள்ளத்தில் மரங்கள் அடித்துச் செல்லப்பட்டன. அவற்றை மண்ணும் சகதியும் மூடி விட அருகிலிருந்த எரி மலை தன் சாம்பலினால் உறையிட்டது.

ஆக்ஸிஜன் வர வழி இல்லாத நிலையில் மரங்கள் ஒரு விசித்திரமான உருமாற்றத்திற்கு ஆளாகின! தரை நீரானது எரிமலை சாம்பலிலிருந்து சிலிகா மற்றும் தாதுப் பொருள்களை உறிஞ்சி விட்டது. சிறையிடப்பட்ட அடி மரம் மினரல் நீரால் நனைந்து சிலிகா அணுக்களால் ஊடுருவப்பட, விளைவு - மரம் க்வார்ட்ஸாகவும் இதர வகை 'ஜாதிக் கற்களாகவும்' உருமாறி விட்டன.

மரங்கள் கற்களாக மாறவே, மற்ற கனிமங்களும் இது போலவே உரு எடுக்க ஆரம்பித்தன. லட்சக்கணக்கான வருடங்கள் உருண்டோட, கல் மரங்கள் 1000 அடி வரை வளர்ந்து விட்டன. புவி இயல் நிபுணர்கள் இதை 'சின்லே உருமாற்றம்'' (Chinle Formation) என்கிறார்கள்.

பாலைவனக் காடுகளாக உள்ள இந்த இடத்தில் இருக்கும் மரங்களை ஆசையுடன் தொடுபவர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகி விடுவார்கள். நிஜமான மரம் போலவே இருக்கும் இவை அனைத்தும், கற்கள்! கற்களேதான்!!

தமிழ் நாடு, மற்றும் கேரளக் காடுகளில் அறுத்துப் போடப்படும் மரங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இயற்கையே உருவாக்கி விட்ட பெரிய மரங்களும் இயற்கையின் அற்புதங்களில் ஒன்று!

தேவதைக் கதைகளில் வரும் மாயாஜாலக் கற்களின் காடு உள்ள லாங்கிடியூட் 109.8W; லேடிட்யூட் 35.1N அரிஜோனாவிலிருந்து 45 மைல் தூரம் உள்ள வின்ஸ்லோ நகரை அடைந்தால் இதைப் பார்க்கலாம்.

'ப்ளூ மெஸா' என்ற சுருக்கம் நிறைந்த காடுகளில் உள்ள மரங்களும், க்வார்ட்ஸ் கற்களும் கலைடாஸ் கோப்பைத் திருப்பும் போது வரும் வண்ண வண்ணக் கோலங்களைத் தோற்க அடிக்கும் காட்சிகளைத் தரும்!

http://kalviamuthu.blogspot.com

# உலகிலேயே தன்னந்தனியான சின்னத்தீவு

மொத்தப் பரப்பளவே 45 சதுர மைல்கள்தான்! இன்றைய ஜனத்தொகையோ 111 பேர்தான்! விளங்காத மர்மத்தைத் தன்னுள் அடக்கியுள்ள இந்தத் தீவை ஆராய முயன்றோர் ஏராளம். அப்படி என்ன சிறப்பு இந்தத் தீவில் இருக்கிறது.

ஈஸ்டர் ஐலேண்ட் எனப்படும் இந்தத் தீவு ஒரு பக்கம் தென் அமெரிக்காவிலிருந்து 2500 மைல் தொலைவிலும், இன்னொரு பக்கத்தில் பசிபித் தீவுகள் சிலவற்றிலிருந்து 2000 மைல் தொலைவிலும் உள்ளது. இங்கே பிரம்மாண்டமான கற்கள் - கடவுள் கற்கள் எனப் பெயர் கொண்டவை - 889 உள்ளன.

கடவுளைச் செதுக்கி வைக்கப்பட்டுள்ள முறையும் விசித்திரமானதாக இருக்கிறது! பல நூறு அடிகள் தூரத்தில் அங்குமிங்குமாக இவை ஏன் நிறுத்தப்பட்டுள்ளன? அனைத்தும் கடலுக்கு முதுகைக் காட்டியவாறே உள்பக்கம் பார்த்து வயல்வெளிகளை நாங்கள் காப்போம் என்பது போல அமைந்துள்ளன. பத்து சதவிகித சிலைகளுக்கு தொப்பிகள் உண்டு. சில இடுகாட்டின் மேலும் சில மற்ற இடங்களிலும் உள்ளன!

முதல் முதலாக 1947ஆம் ஆண்டு புகழ்பெற்ற மனித இனநூலாரான தொர் ஹேயர்தால் என்பவர் தென் அமெரிக்காவிலிருந்து இடம் பெயர்ந்து இந்தப் பழங்குடியினர் இங்குக் குடியேறி இருக்கலாம் என்ற அனுமானத்தில் ஒரு தெப்பம் கட்டி அவர்கள் சென்ற வழியை அறிவதற்காகப் போனார். ஆனால் பின்னால் அவர்களின் மரபணுவை எடுத்துச் சோதித்து பார்த்ததில் அவர்கள் பசிபிக் தீவுகளிலிருந்தே ஈஸ்டர் தீவுகளுக்குக் குடியேறியது நிரூபணமானது. வேறு பல தீவுகளில் மரத்தினாலான சிறு உருவங்கள் உள்ளன. ஆனால் இங்கோ பிரம்மாண்டமான கற்சிலைகள் உள்ளன.

http://kalviamuthu.blogspot.com

அந்தத் தீவில் ரக்பி விளையாட்டில் உபயோகப்படுத்தப் படும் இரு முனையும் கூராக உள்ள பந்து போல இருந்த சில பவளக் கற்கள் அங்குமிங்குமாக சிதறிக் கிடந்தன! அவற்றில் நடுவில் ஒரு ஓட்டையும் இருந்தது! எதற்காக இந்தப் பவளக் கல் என்று புரியாத நிலையில் ஒரு ஆராய்ச்சியாளர் கற்சிலையின் கண் பகுதிகளில் இவற்றைப் பொருத்திப் பார்த்தார். மிகுந்த ஆச்சரியத்தைத் தரும் வகையில் அவை அந்த இடத்தில் பொருந்தின.

பாதி முடிக்கப்பட்ட நிலையில் சில கற்கள் உள்ளன. இந்த பிரம்மாண்டமான சிலைகளை எப்படி நிறுத்தினார்கள்? அதற்குரிய மனித வளம் அங்கே இருந்ததா? இதரப் பொருள்கள் இருந்தனவா? ஏன் அவற்றை நிறுவினர்?

நவீன பொறியியல் வல்லுநர்கள் மரத்தைச் சாரம் கட்டி இந்தச் சிலைகளை நிறுவுவது சாத்தியமே என்று முடிவு கட்டினர். அப்படியானால் பல்லாயிரக் கணக்கில் இங்குள்ள பனை மரங்கள் வெட்டப்பட்டிருக்க வேண்டும். கடவுளை வழிபடுவதற்காக இவை அமைக்கப்பட்டனவா? அப்படியானால் இவ்வளவு பெருந் தொகையில் ஏன் அமைக்கப்பட வேண்டும்? அந்தச் சிலைகள் ஆங்காங்க அமைந்துள்ளதை ஒரு வரைபடம் போட்டு ஆராய்ந்ததாம் அலெக்ஸாண்டர் என்பவர் ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்தார்.

சூரியனை நம்பியே வாழ்ந்து வந்த பண்டைய மக்கள் அது எந்தத் திசையில் என்று வரும் என்பதையும், அது உழவுக்கு ஏற்ற காலமா, பயிர் செழிக்கும் பருவமா என்பதைக் கண்டறியும் வகையில் ஒரு ஒழுங்கு முடிறப்படி அவற்றை அமைத்துள்ளனர் என்றார். பூமியைச் சுற்றி வரும் சந்திரன் தினமும் வடக்கில் ஒரு சிறிது தள்ளியே உதிக்கிறான் என்பதும், அது திரும்பி தெற்கு நோக்கி வருவதற்கு முன் சற்று நிலையாக நிற்கிறான் என்பதும், இந்த முழுச்சுற்றுக்கு 18.61 வருடங்கள் ஆகின்றன என்பதையும் அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

ஆனால் அடுத்து சந்திரன் நிற்பது, வேறு பருவத்தில் வரும்; அதே 18.61 ஆண்டுகளில் வராது. சிறிது மாறுபடும். இது பயிர்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். ஆகவே இதைத் துல்லியமாகக் கணிக்கவே இந்த கல் கடவுள்கள் ஒரு ஒழுங்கு முறைப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்றார் தோம்!

ஆனால் எந்தப் பயிர் செழிக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் மரங்களை வெட்டி இந்தச் சிலைகளை நிறுவினார்களோ அதுவே அவர்களுக்குப் பாதகமாக ஆகிவிட்டது. பல்லாயிரக் கணக்கான மரங்களை வெட்டவே கடல் அரிப்பைத் தடுக்கும் ஒரு பெரிய அரண் அழிக்கப்பட்டது. அத்தோடு மழை வருவதற்கான இன்றியமையாத காடு என்னும் செல்வத்தை அவர்கள் இழந்தனர். பசி பட்டினி மிஞ்சவே தங்களுக்குள் சண்டையிட்டு அந்த இனம் மடிந்திருக்க வேண்டும். பத்தாயிரம் பேரைக் கொண்டிருந்த தீவு 200ஆகக் குறைந்து இப்போது இன்னும் குறைந்து 111 ஆக ஆகிவிட்டது!

ஈஸ்டர் தீவிலிருந்து ஒரு மைல் தொலைவில் ஒரு சிறிய பாறை உள்ளது. அந்தப் பாறையில் கடல் பறவைகள் முட்டை இடுவது வழக்கம். வருடத்தில் ஒரு நாள் அவர்கள் வழக்கப்படி பல்வேறு பழங்குடி இனத்தவரும் தங்கள் தங்கள் இனத்தில் ஒரு வீரரை நியமிப்பர். அவர்கள் கடலிலே குதித்து சுறாமீன்கள் நிறைந்த அந்தப் பகுதியில் நீந்திச் சென்று அந்தப் பாறையிலிருந்து ஒரு பறவையின் முட்டையைக் கையில் ஏந்தி அது நனையாதவாறு கையை மேலே தூக்கியவாறே நீந்தி மறுபடியும் தீவுக்கு வர வேண்டும். இந்தப் போட்டியில் யார் ஜெயிக்கிறார்களோ அந்த இனமே அடுத்த ஆண்டு தீவை ஆளும்! கையில் முட்டையை ஏந்தியவாறே நீந்துவது கடினம் என்பதால் தலையில் ஒரு தொப்பியை அணிந்து அதில் முட்டையை வைத்துக் கொண்டு வந்தனராம்!

http://kalviamuthu.blogspot.com

1722ஆம் ஆண்டு ஈஸ்டர் திருநாள் அன்று இந்தத் தீவு கண்டுபிடிக்கப்பட்டது. இங்கிருந்து 1500 பேர்களை அடிமையாகப் பிடித்த பிரிட்டிஷார் பாஸ்பேட் சுரங்கங்களில் வேலை பார்க்கவும் இழுத்துச் சென்றனர். இவற்றில் உயிர் பிழைத்து எஞ்சி இருந்தவர் 15 பேர் மட்டுமே!

உருட்டுக்கட்டைகளால் உருட்டியும் சாரம் கட்டியும் பல ஆயிரக்கணக்கான மரங்களை அழித்தோர் நிறுவிய சிலைகள் சுட்டிக் காட்டும் பாடம் என்ன?

மரங்களை அழிப்போர் அழிந்து படுவர் என்பது இயற்கைதானே சுற்றுப் புறத்தை நாம் காத்தால் நம்மை இயற்கை காக்கும் என்பதை இந்த பிரம்மாண்டமான கற்கள் பேசாமல் பேசி உபதேசிக்கின்றனவோ? !

# மான் வடிவத்தில் ஒரு தோட்டம்!

உலகின் பிரமிக்கத்தக்க மான் தோட்டம் உருவானது எப்படி தெரியுமா?

16 ஏக்கர் நிலப்பரப்பில் 10 லட்சம் சோள விதைகள் விதைக்கப்பட்டு இந்தத் தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வானத்திலிருந்து பார்த்தால் மான் போலத் தோற்றமளிக்கும் இதை வடிவமைக்க சாட்டிலைட்டின் உதவி நாடப்பட்டது. அப்போதுதானே வானிலிருந்து பார்த்தால் இது மான் போலத் தோற்றமளிக்கும்.

இதன் உள்ளே சுற்றுலாப் பயணிகள் சென்று பார்க்க உள்ள நடைபாதையின் நீளம் மட்டும் 10 மைல்கள். இதை உருவாக்க ஆன செலவு மட்டும் 70,000 பவுன்கள், அதாவது இந்திய மதிப்பில் சுமார் 49 லட்சம் ரூபாய்கள்!

வெள்ளி, தங்கம், பிளாட்டினம் என்ற மூன்று லெவல் பாதை அமைப்பு இந்த பார்க்கில் உள்ளது. முதல் இரண்டு பாதைகளைக் கடந்தவர்கள் மூன்றாவதான பிளாட்டினம் பாதையை அடையலாம்; இதற்குப் பல மணி நேரம் ஆகும்!

இந்த புதிரான பார்க்கை மார்ட்டின் ஸ்டீவர்ட் என்பவர் உருவாக்கினார். இங்கிலாந்தில் கிரைஸ்ட் சர்ச் என்ற இடத்தின் அருகில் இருந்த இவரது பண்ணையில் முதல் சோள விதையை ஊன்றியபோது இவர் மூளையில் உதித்த ஐடியா இது!

http://kalviamuthu.blogspot.com

அருகிலிருந்த நியூ ஃபாரஸ்ட் என்ற இடத்திற்கு சுற்றுலாப் பயணிகள் போகக் கூடாது என்று ஒரு வருடம் அது மூடப்பட்டது. விளைவு, அந்தப் பகுதியில் இதையே நம்பி வாழ்ந்தவர்களின் பொருளாதார நிலை மோசமானது. பார்த்தார் மார்ட்டின். புதிதாக உலகின் பெரிய மான் தோட்ட பார்க்கை உருவாக்கிவிட்டார்.

சுற்றுலா பயணிகள் வருகையால் அடையும் லாபம் ஒருபுறம் இருக்கட்டும். ஜூலை முதல் செப்டம்பர் வரை அவர்கள் வந்து முடிந்தவுடன் அனைத்து சோளங்களும் அறுவடைக்கு தயாராகி விடும். அது மிருகங்களுக்கு நல்ல தீனியாக விற்கப்படும். இது போன்ற புதிர் பார்க்குகளை உருவாக்குவது ஐரோப்பாவில் சகஜம். சர்ரே என்ற இடத்தில் பழமையான புதிர் பார்க் ஒன்று உள்ளது. 1669 முதல் 1694 வரை விதைகள் தூவி அமைக்கப்பட்டது இது. ஆனால் முதல் புதிர் பார்க்கை 600 வருடங்களுக்கு முன்பே அமைத்த பெருமை இத்தாலியையே சேரும்.

# பயோமெட்ரிக் பாஸ்போர்ட்!

தீவிரவாதத்தின் மீது போர் தொடுத்திருக்கும் அமெரிக்கா நவீன தொழில்நுட்ப வளர்ச்சியை முழுதுமாகப் பயன்படுத்த முடிவு செய்திருக்கிறது. இன்னும் மூன்றே ஆண்டுகளில் அனைவருக்கும் பயோமெட்ரிக் பாஸ்போர்ட்டை வழங்க அமெரிக்க அரசு தீர்மானித்திருக்கிறது! அதென்ன பயோமெட்ரிக் பாஸ்போர்ட்? ஒவ்வொரு மனிதனுக்கும் கண்மணி, கைரேகை எடுத்து ஏற்கனவே முக்கியமான அரசு அலுவலகங்களிலும், பாதுகாப்புப் பிரிவிலும் பணியாற்றுவோருக்கு ஸ்மார்ட் கார்ட் என்ற அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் விரல்களின் நீளம், கைகளின் அகலம் உட்பட பல்வேறு உடல் அடையாளங்கள் இருக்கும். ஆனால் நாடு தழுவிய அளவில் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்படும்போது இவை அனைத்தையும் தருவது இயலாத ஒன்று. ஆகவே கண்மணி, கைரேகை இவை இரண்டுடனும் முகமும் இருக்கும்படி பயோமெட்ரிக் பாஸ்போர்ட் தரப்படும். ஆனால் வளர்ந்து விட்ட நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்த ஒவ்வொருவருடைய அந்தரங்கத்திலும் அதிகம் அரசு பிரவேசிக்கப்படுகிறது என்று மனித உரிமைக் கழகத்தினர் கூறுகின்றனர். ஆனால் இந்த மறுப்பையும் மீறி, தீவிரவாதத்தைத் தொலைத்துக்கட்ட அறிவியல் புனைக்கதைகளில் இதுவரை வந்த அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவதன் மூலம் அமெரிக்கா அதை நனவாக்குகிறது.

http://kalviamuthu.blogspot.com

# கான்சர் நோய்க்கு ஒலி சிகிச்சை

பிரிட்டிஷ் டாக்டர்கள் புரட்சிகரமான ஒலி சிகிச்சை ஒன்றை கான்ஸர் நோயைப் போக்கக் கண்டுபிடித்துள்ளனர்! இது கான்ஸர் கட்டிகளையும் கான்ஸர் செல்களையும் ஒலி அலைகள் மூலம் உருக்கிவிடும்! வழக்கமான சர்ஜரியில் கையாளப்படும் கத்தியிலிருந்து இனி நோயாளிகளுக்கு விடுதலை தான்! இந்த புதிய சிகிச்சைக்கு ஹை இன்டென்ஸிடி ஃபோகஸ்ட் அல்ட்ரா சவுண்ட் ஹைபு என்று பெயர்! இந்த சிகிச்சைக்கு செலவும் குறைவு. ஜப்பானில் 132 பேரிடம் இந்த சிகிச்சை கையாளப் பட்டதில் 70 சதவிகிதம் பேர் முற்றிலுமாக ஐந்து வருடங்களில் குணமடைந்து விட்டனர். இந்த ஹைபு முறையில் ரேடியேன் முற்றிலுமாக இருக்காது. கத்தி மூலம் அறுவை இருக்காது.

ஒரு நல்ல அனுபவம் வாய்ந்த நர்ஸ் இதை எளிதில் கற்று விட முடியும்! ஒலி அலைகள் கான்ஸர் செல்களின் மீது போகஸ் செய்யப்பட்டு 90 டிகிரி செல்ஸியஸ் வரை சூடாக்கப்பட்டு ஒரே கணத்தில் திசுவை அழித்து விடுகிறது. இந்த முறையில் உலகமெங்கும் இது வரை 6000 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

UKHIFU என்ற நிறுவனம் இந்த சிகிச்சையை அதன் மேனேஜிங் டைரக்டர் நிக் ஸ்டீவன்ஸ் மேற்பார்வையில் செய்து வருகிறது. வலி இல்லை; ரத்தம் ஏற்றத் தேவை இல்லை; எளிதானது என்று பல்வேறு நல்ல அம்சங்களைக் கொண்டுள்ள இந்த சிகிச்சை பயமுறுத்தும் நோயான கான்ஸரை விரட்டிவிடும் என்பது எவ்வளவு பெரிய நல்ல செய்தி!

http://kalvianuthu.blogspot.com

# நோய் தீர்க்கும் காந்தசக்தி!

ஐரோப்பிய விண்வெளி ஏஜென்ஸி, 'க்ளஸ்டர் II'வை ஏவி பூமியின் மேற்பரப்பிலுள்ள மண்டலத்தை காந்த ஆராயப் பணித்துள்ளது. முதல் நூற்றாண்டிலிருந்து காந்த ஆராய்ச்சி இன்று வரை உலகில் நடைபெற்று வருகிறது.

காந்தத்தின் நோய் தீர்க்கும் ஆற்றல் 400 ஆண்டுகளாக சரித்திர குறிப்பேடுகளில் இடம் பெற்றுள்ளது. 1600ம் ஆண்டு வில்லியம் கில்பர்ட் 'ON THE MAGNET' என்ற நூலை வெளியிட்டார். முதலாம் எலிஸபெத் ராணியின் மருத்துவர் இவர். காந்தத்தின் நோய் தீர்க்கும் ஆற்றலை வெளியிட்டதோடு, அது கணவன் மார்களை மனைவிமார்களுடன் இணக்கமாக இருக்க வைக்கும் என்று குறிப்பிட்டார்.

அலோபதிக்கு மாற்று வைத்தியமாக 20 ஆண்டுகளாக காந்த சிகிச்சை உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

'THE BOOK OF MAGNET HEALING' என்ற புதிய புத்தகத்தில் ரோஜர் காக்ஹில் என்பவர், மருத்துவ துறை அபாரமாக முன்னேறி வந்தாலும் மூளை சம்பந்தமான நோய்கள், ஆஸ்த்மா, நீடித்த களைப்பு ஆகிய நோய்கள் நமது தற்காலத்திய வாழ்க்கை முறையால் அதிகமாகி வருகின்றன என்கிறார். தற்காலத்தில் வாழ்க்கையுடன் ஒன்றிவிட்ட கம்ப்யூட்டர், கார், டெலிகம்யூனிகேன் அமைப்புகள் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்படும் எலக்ட்ரோ மாக்னடிக் எனர்ஜியே இதற்குக் காரணம் என்கிறார் அவர்.

http://kalviamuthu.blogspot.com

அது சரி, காந்தம் என்ன செய்யும்?

ரத்த ஓட்டத்தை சீராக்கும். சக்தியை அதிகரிக்கும். மூட்டு மற்றும் தசை வலியை நீக்கும் (டென்னிஸ் எல்போவைப் போக்கும்)... இப்படி பல பயன்கள்! சந்தையில் இப்போது பல காந்த சிகிச்சை உபகரணங்கள் வந்துள்ளன. அவற்றில் சில மாக்நெட் ப்ரேஸ்லெட்-வாட்ச் போல கட்டிக் கொள்ளக் கூடிய இது, சக்தியை அதிகரிக்கும். மாக்னெஸேஜ்-வலியைக் குறைக்கும் இது ஒரு மாஸேஜர்.

மாக்னோ-பல்ஸ் லேடி க்யூர்-என்ன இது? சக்தி வாய்ந்த காந்தம்! பெண்களின் மாதவிலக்கு வலியைப் போக்கும்! ஹோமெடிக்ஸ் தெராப்-எலாஸ்டிக் பேண்டேஜான இத மூட்டு வலியைக் குறைக்கும்!

# சேற்றைப் பூசினால் பொலிவு கூடும்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், ஜூலியஸ் சீஸர் தனது படை வீரர்களுடன் வட இத்தாலியின் சமவெளியைக் கடந்து வந்த சமயம், சண்டையில் காயம் பட்டிருந்த சில குதிரைகளை, கந்தகம் கலந்திருந்த சேற்றுக் குட்டையில் அப்படியே விட்டு விட்டுச் சென்று விட்டான். ரோமிலிருந்து திரும்பி அதே வழியில் வந்த சீஸர் அந்தக் குதிரைகள் புதிய பொலிவுடனும் அதிக பலத்துடனும் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

அங்கிருந்த நீரைக் குடித்து அந்தச் சேற்றில் உருண்டு புரண்டதே இந்தப் புதிய வலிமைக்குக் காரணம் என்பதை உணர்ந்த அவன் எனது குதிரைகளுக்கு இது நல்லது என்றால் எனது படைவீரர்களுக்கும் நல்லதாகத் தானே இருக்க முடியும் என்று எண்ணினான். விளைவு அங்கு ஒரு நீரூற்றை அமைத்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும், சேற்றின் புகழ் மங்கவில்லை. மாறாக மேலும் ஓங்குகிறது. அபானோ டெர்மியில் உள்ள இருநூறுக்கும் மேற்பட்ட ஹோட்டல்களில் உள்ள ஊற்றுக்களை நாடி ஆண்டிற்கு பத்து லட்சம் பேர் வருகிறார்கள். படுவா நகருக்குத் தெற்கே உள்ளது இந்த அபானோ டெர்மி.

"சேற்றில் குளியலா?" என்றோ "சேற்றைப் பூசிக் கொள்வதா?" என்றோ முகத்தைச் சுளிக்க வேண்டாம். டினா போர்லி என்ற பெண்மணி பல ஹோட்டல்களுக்கு உரிமையாளர். அவர், "இந்த சேறு விசேஷமானது" என்கிறார். நகருக்கு வெளியில் உள்ள ஒரு குட்டையிலிருந்து ஹோட்டலுக்கு இது கொண்டு வரப்படுகிறது என்கிறார் அவர்.

http://kalviamuthu.blogspot.com

மூலிகை கலந்த நீர், எரிமலையின் அடிப்பகுதியிலிருந்து வந்து, இந்தச் சேற்றுக் குட்டையை அடைகிறது. அங்கே பல மாதங்கள் இருப்பதால் நாற்றமும் போய் விடுகிறது. படுவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிபுணர்கள், இந்தச் சேற்றைப் பரிசோதித்து "ஓகே" சொன்னவுடன், இது உபயோகத்திற்கு கொண்டு வரப்போகிறது.

மரியா என்ற நடுவயதுப் பெண்மணிக்கு இந்த சேற்றுத் தெராபி தரப்பட்டது. நிர்வாணமாக சிகிச்சை அறையில் சேற்றைப் பூசிக் கொண்டார் மரியா. நல்ல சூடு வேறு! பிளாஸ்டிக் ஷீட்டால் அவரைச் சுற்றி 45 நிமிடங்கள் வைத்திருந்தனர்.

சில நிமிடங்கள் கழிந்தவுடனேயே உடல் தளர்ந்து அமைதி வர ஆரம்பித்தது என்கிறார் மரியா! முகத்தில் சேற்றைப் பூசிக் கொள்வதால் இளமை முகம் திரும்புகிறதாம்.

மூட்டு வலி, தசை வலி, சுளுக்கு முதுகு வலி இவற்றால் படாதபாடுபடுவோர், அபானோ டெர்மி வருகின்றனர். இதைச் சுற்றியுள்ள யூகானியன் மலைத்தொடர், மனதிற்கு ரம்யமாக வேறு இருக்கிறது.

அங்கு ஒருமுறை சென்று வந்த தங்கள் தாயைப் பார்த்த குழந்தைகளுக்கு முதலில் அடையாளமே தெரியவில்லை! "அட பத்து வயது குறைந்து போய் இளமை திரும்பி இருக்கிறதே" என்று அனைவரும் வியந்தனராம்! வாழ்க சேறு! வளர்க அதன் புகழ்! என்கின்றனர் இங்கு வரும் உல்லாசப் பயணிகளும், நோயாளிகளும்!

http://kalviamuthu.blogspot.com

# மனிதனுக்குப் பன்றியின் உறுப்புகள்!

அறிவியல் சென்ற நூற்றாண்டில் தந்த ஆச்சரியங்களுள் குளோனிங்கும் ஒன்று.

“டாலி’ என்ற ஆட்டைத் தொடர்ந்து விஞ்ஞானிகள் குளோனிங் மூலம் பன்றியைத் தோற்றுவித்து விட்டார்கள்! இதன் விளைவு-இந்தப் பன்றியின் உறுப்பை மனிதனுக்குப் பொருத்துவதற்கு ஒரே ஒரு அடி முன்னர்தான் இருக்கிறோம் என்கின்றனர்.

மில்லி, கிறிஸ்டானா, அலெக்ஸிஸ், காரெல், டாட்காம் - இவைகள் எல்லாம் வர்ஜினியாவில் பிறப்பிக்கப்பட்ட பன்றிகளின் பெயர்கள். இவைகளது உறுப்புக்கள் மனிதருக்காகத் தயார்! பி.பி.எல் தெராப்டிக்ஸை சேர்ந்த விஞ்ஞானிகளும், எடின்பரோவில் உள்ள ரோஸ்லின் இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் - (இவர்கள் தான் டாலியை உருவாக்க உதவியவர்கள்) இந்த அதிசய ‘ப்ரேக் த்ரூ’வுக்குக் காரணம்!

நான்கு வருடங்கள் கழித்து ‘க்ளினிகல் ட்ரையலை’த் தொடங்க இருக்கின்றனர்.

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ரான் ஜேம்ஸ், “எங்களுக்குத் தெரிந்த எல்லா தடைகளும் சமாளிக்கப்பட்டு விட்டன. ஆண் பன்றியுடன் பெண் பன்றியை இணைய விட்டு பல்வேறு உத்திகளைக் கையாண்டு, மனிதனுக்கான உறுப்பு பற்றாக்குறையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம்!” என்கிறார்.

http://kalviamuthu.blogspot.com

பன்றியின் உறுப்பை மனிதனுக்குப் பொருத்தினால் வைரஸ் மூலம் பல புதிய வியாதிகள் உருவாகும் என்பதை பிபிஎல் நிறுவனம் மறுக்கிறது. “மௌன வைரஸ் என்று ஒன்றும் இல்லை.” “மனிதனுக்கு மனிதன் உறுப்பைப் பொருத்தும் போது மட்டும் இந்த மௌன வைரஸ் இருக்காதா என்ன?” என்று கேட்கும் ஜேம்ஸ், 160 பேருக்கு பன்றி செல்லை ஊசி மூலம் செலுத்தி இருக்கிறார்.

இது ஒரு புறம் இருக்க ஜெனிடிக் ரெவோல்யூன் என்ற புத்தகத்தை எழுதிய பிரபல அறிஞர் டாக்டர் பாட்ரிக் டிக்ஸன் பன்றிகளின் நலம் பற்றிக் கவலைக் குரல் எழுப்பி உள்ளார். “மனிதனுக்காகத் தயாராகும் பன்றிகளில் ஒன்று ஆர்த்திரிடிஸ் நோய்க்கு ஆளானதோடு கண்களை இழந்து இனம் பெருக்கும் சக்தியையும் இழந்து விட்டது” என்கிறார் அவர்.

இந்த ஜெனிடிக் ப்ளூ பிரிண்டைத் தயாரிக்க உலகெங்கும் உள்ள விஞ்ஞானிகள் போட்டி போட்டுக் கொண்டு நான் முந்தி நீ முந்தி என்று அவசரம் அவசரமாக ஆராய்ச்சி நடத்தி வருகையில் இதை வணிக நோக்கில் அணுகி ஆதாயம் பெற விரும்புவோர் தகவல்களைத் தர தயங்குகின்றனர்.

உலகின் இப்போதைய “ஹாட் டாபிக்’ ஜெனிடிக் தகவல்தான்!

## ஆர்டர் கொடுத்தால் உங்கள் குரூப் ரத்தம் தயார்!

உலகம் முழுவதும் பல கோடி பாட்டில் ரத்தம் ஒவ்வொரு வருடமும் தேவையாக இருக்கிறது. இந்தத் தேவைகளில் பல அரிதான ரத்த வகையும் இருப்பதால் கிடைப்பதும் கஷ்டம்; கிடைத்தாலும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில்தான் செயற்கை ரத்தம் தயார் என்ற விஞ்ஞான புதுக் கண்டு பிடிப்பு அறிவிப்பு வந்து உலகையே பிரமிக்க வைத்திருக்கிறது!

இனி உங்களுக்குத் தேவையான ரத்தத்தை அந்தந்த குரூப் வகை எவ்வளவு தேவை என்பதைத் தெரிவித்து அதை உற்பத்தி செய்து பெற முடியும். இந்த அரிய கண்டு பிடிப்பை மிளசோட்டாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்! எம்ப்ரையோனிக் ஸ்டெம் செல் எனப்படும் கருமுளை ஸ்டெம் தண்டுகளிலிருந்து சில கெமிக்கல்களைச் சேர்த்து செயற்கை ரத்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு வருடங்களில் தீவிர சோதனைகள் செய்து இதன் வெற்றி மற்றும் பக்க விளைவுகள் ஏற்படாது என்ற உத்தரவாதம் ஆகியவை உறுதி செய்யப்படும். பிறகு 2010-ம் ஆண்டிலிருந்து ரத்தம் விற்பனைக்கு சந்தையில் கிடைத்து விடும்! பேராசிரியர் டான் கௌப்மேன், “இது சுத்தமான ரத்தம்! எந்த குரூப் வேண்டுமானாலும் கிடைக்கும்” என்கிறார்.

இப்போது கிடைக்கும் ரத்தத்தைப் பயன்படுத்தப் பலரும் தயங்குவதன் காரணம் எய்ட்ஸ் மற்றும் பல ரகமான புது நோய்களால் ரத்தம் சுத்தமாக இல்லை என்பதுதான்! ஆகவே இந்தப் பயத்தையும் போக்கும் ஸ்டெம் செல் செயற்கை ரத்தம்-இயற்கை ரத்தத்திற்கு வரப்பிரசாதமான ஒரு மாற்றுத்தான்! இனி விபத்தோ, வியாதியோ ரத்தம் தேவைப்படும் அனைவரையும் காப்பாற்ற முடியும்! உண்மையில் இது வெளி உலகில் கிடைக்கும் போது அறிவியல் விளைவிக்கும் அற்புதங்களில் புரட்சிகரமான அற்புதமாக இருக்கும்!

http://kalviamuthu.blogspot.com

# ஆக்சிஜன் குளியல்

புத்துணர்வு பெற ஒரு ஹைட்ராக்ஸின் குளியல் குளித்துவிட்டு வருகிறேன் என்று சொன்னாலோ, ஒரு ஆக்சிஜன் மாத்திரை சாப்பிடப்போகிறேன் என்று சொன்னாலோ வியப்படைய வேண்டாம். இரண்டும் இப்போது ரெடி.

1774-ல் ஜோசப் ப்ரீஸ்ட்லி என்ற இங்கிலாந்து விஞ்ஞானி கண்டுபிடித்த பீரியாடிக் டேபிளின் எட்டாவது மூலகமான ஆக்சிஜன், நாம் சுவாசிக்கும் காற்றில் 20 சதவீதம் இருக்கிறது. உடம்பில் மூன்றில் இரண்டு பங்கு இருக்கிறது. தண்ணீரிலோ 90 சதவீதம் இருக்கிறது.

சுத்தமான ஆக்ஸிஜன், பாக்டீரியா கிருமிகளை தடுக்கிறது. வயதாவதையும் தடுக்கிறது. ஆகவே பியூட்டி பார்லர் மற்றும் மேலை நாட்டு ஸ்பாக்களும் ஆக்ஸிஜனை விற்பனைக்கு கொண்டு வந்து விட்டன!

இதை ஹைட்ராக்ஸிஜன் குளியலுடன் இணைத்து விட்டார்கள். சாதாரணமாக ஆக்ஸிஜன், தோலை ஊடுருவி உள்ளே செல்லாது. ஆகவேதான் ஹைட்ராக்ஸிஜன் குளியல் உதவுகிறது. சலைன் என்னும் சதை சொல்யூஷனை மூடி இருக்கும் மெல்லிய உறைதான் தோல். ஆக்ஸிஜன் கலக்கப்பட்ட தண்ணீரில் குளிப்பதால் ஆக்ஸிஜன் தோலை ஊடுருவி சுலபமாக உள்ளே செல்லும். அது மட்டுமல்ல. இந்த ஆக்ஸிஜனுடன் வைட்டமின்கள் A, C, E ஆகியவையும் சேர்த்து அனுப்பப்படும்.

http://kalviamuthu.blogspot.com

இறுதியில் ஆக்ஸிஜனை மாஸ்க்காக அணிந்து புத்தகம் புதிய ஆக்ஸிஜனை சுவாசிக்க வைப்பார்கள். புத்துணர்ச்சி பெற்றோர் அடுத்த ஸ்பா குளியல் எப்போது என்று ஏங்குவார்கள்!

சர்ச்சையை கிளப்பி உள்ள ஆக்ஸிஜன் மாத்திரையும் இப்போது இங்கிலாந்தில் விற்பனைக்குத் தயார். ஒரு மாத்திரையின் விலை பதினைந்து ரூபாய். உடலில் கழிவுப் பொருள்கள் இரண்டரை கிலோவிலிருந்து ஐந்து கிலோ வரை இருக்கிறது. OxCgen என்ற இந்த மாத்திரை கெடுதி விளைவிக்கும் வைரஸ் மற்றும் இதர கிருமிகளை வெளியேற்றி கழிவு இல்லாத உடலை புத்துணர்ச்சியுடன் இருக்க வைக்கிறது. கேம்பிரிட்ஜை சேர்ந்த டாக்டர் ராபர்ட் தாமஸ் உடல் கழிவுகளை அகற்றி ஆக்ஸிஜன் நன்மை தர வல்லதுதான் என்று சர்டிபிகேட் கொடுக்கும் போதே, அபர்டீன் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த பேராசிரியர் ஹ்யூ பெனிங்டன் "எனக்கு இவர்கள் கூறுவதில் சந்தேகம்தான்" என்கிறார். குடுமி பிடி சண்டை ஒருபுறம் நடந்தாலும் மினரல் வாட்டர் விற்பனை சென்னையில் அமோகமாக நடப்பது போல் ஆக்சிஜன் குளியலும் மாத்திரையும் மேலை நாட்டில் சக்கைப் போடு போடுகிறது!

# விஷமே வியாதிக்கு நிவாரணம்

தென் அமெரிக்காவில் உள்ள ஒரு வகை ஸ்பைடரின் விஷம் கான்ஸர் மற்றும் ப்ரெயின் ட்யூமர் வியாதிக்கான மருந்தாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்!

பல வியங்களை ஆராய்ந்த விஞ்ஞானிகள் இரண்டு மூன்று சிலந்திகளின் விஷங்கள் நன்மைகளை ஏற்படுத்துகின்றன என்கின்றனர். சிலிரோஸ் டாராண்டுலா என்ற ஒரு வகை அரிய சிலந்தி இனம் அதிக விஷத்தைக் கக்குகிறதாம்! இந்த விஷத்தில் உள்ள ஒரு மூலப்பொருள் செல்லில் வியாதியைப் பரப்புவதைத் தடுக்கிறதாம்! எந்தெந்த வியாதிகள்? இதய வியாதி உள்ளவர்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்தவுடன் இதயம் அதிகம் சுருங்குகையில் அந்த ரீ ஆக்ஷனால் பல நோயாளிகள் இறப்பதுண்டாம். இதைத் தடுக்கும் விதத்தில் இந்த விஷம் பயன்படும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அடுத்து மூளையில் ஏற்படும் கட்டியின் வளர்ச்சியையும் இந்த விஷம் தடுத்து நிறுத்தும் என்று கண்டுள்ளனர். பேராசிரியர் ஷாஸ் இதை அறிவித்ததோடு ஒவ்வொரு வகை விஷத்தையும் சோதனைக்கு உட்படுத்தி உட்படுத்திப் பார்த்ததில் கடைசியாக இதைக் கண்டுபிடிக்க முடிந்தது என்றார். இந்த ஆராய்ச்சி தொடர்கிறது! முடிவில் நிவாரணம் அளிக்கும் நல்ல மருந்து கிடைக்கக் கூடும்! விஷமும் வியாதிக்கு மருந்தாகும் என்பது அதிசய விஷயமே.

http://kalviamuthu.blogspot.com

# கிரீனிச்

மில்லென்னியம் நகரம்

அடுத்த இரண்டாயிரமாவது ஆண்டில் 120 லட்சம் பேர் பிரிட்டனில் உள்ள மில்லென்னியம் டோமைப் பார்க்க வருவார்கள் என மதிப்பிடப்படுகிறது.

புதிய மில்லென்னியத்தை - எதிர்காலத்தை வரவேற்க இத்தனை பேர் வருவதில் ஆச்சரியம் இல்லைதான்! துண்டு துண்டாக உடைந்து விடுவோமோ என்று பயப்படும் பிரிட்டன் மக்களுக்கு இப்படி அனைவரும் ஒன்று கூடுவது ஒரு ஆறுதலான விஷயம் தான்! இந்த டோமைப் பார்த்து விட்டு கிரீனிச் செல்வார்கள் அனைவரும்!

பிரிட்டனின் உன்னதமான கட்டிடங்களில் கிரீனிச்சில் உள்ள ராயல் நேவல் ஆஸ்பத்திரி, ராயல் நேவல் கல்லூரி ஆகியவை கிறிஸ்டோபர் ரென் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டவை. கிரீனிச் பல்கலைக் கழகம் புதிதாகத் தோன்றிய கட்டிடம். லண்டனில் ராயல் நேவல் கல்லூரியில் டோமைப் பார்த்ததோடு செயிண்ட் பால் டோம், மில்லென்னியம் டோம் ஆகியவை அனைவரையும் கவரும்.

ஜான் ஃபிளாம்ஸ்டீட் (John Flamsteed) என்ற முதல் வானவியல் நிபுணர் சுவர்க்கத்தின் படத்தை இங்கே வரைந்தார். இதில் முக்கியமான கிரீனிச்சின் கோடு (பூஜ்யம் டிகிரி லாங்கிடியூட்) (Prime meridian - Zero degree longitude) இருக்கிறது.

http://kalviamuthu.blogspot.com

உலக நாடுகள் செய்து கொண்ட உடன்பாட்டின் படி புதிய மில்லென்னியம் அதிகார பூர்வமாக கிரீனிச்சில் தான் தொடங்கும் பி.பி.சி நிபுணர்கள் இங்கு பல கோடி பேர் வருவார்கள் என்று கூறுகின்றனர்.

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தலைமுறை தலைமுறையாக கிரீனிச்சின் அழகைக் கூட்ட அனைவரும் அரும்பாடு பட்டுள்ளனர்! கிரீனிச்சின் கலாச்சாரமும் வரலாறும் பிரிட்டனின் கலாச்சாரத்தையும் வரலாற்றையும் பிரதிபலிக்கும் ஒரு சிறு துளி என்றே சொல்லலாம்.

சிறிய மீனவரின் கிராமமாக இருந்த கிரீனிச் அங்கிருந்து பலரும் உலகெங்கும் செல்லச் செல்ல பிரிட்டனின் ஆட்சி பரவக் காரணமாகி விட்டது.

ஸ்பெய்னின் சேனை தோற்றதற்கும் கிரீனிச் மக்களே காரணமாவர். அட்மிரல் சர் ஜான் ஹாக்கின்ஸ் கிரீனிச் அருகே தான் தனது கடற்கோட்டையையும் அமைத்தார். எலிஸபெத் முதலாம் ராணியாரும் அவரது தந்தையாரும் பிறந்தது கிரீனிச்சிலேதான்! கிரீனிச் அரண்மனையில் வளர்ந்து அங்கிருந்தே வெற்றி பெற்று திரும்பும் சர் பிரான்ஸிஸ் டிரேக் உள்ளிட்ட தளபதிகளை வரவேற்க அவர்கள் சென்றுள்ளனர்!

பின்னர் 1717ல் அங்கிருந்த சர்ச் இடிந்து விழுந்து விடவே பார்லிமெண்டின் உதவியோடு அதை மீண்டும் கட்டினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கூட இங்கிருந்து உலகெங்கும் செல்லும் பழக்கத்தை கிரீனிச் மக்கள் கைவிடவில்லை! ஆகவே இயல்பாகவே வெளி நாட்டு மக்களும் இங்க வந்து தங்கலாயினர்.

பிரெஞ்சு மக்களும் இங்கு வந்து குடியேறினர். ஆகவே வெளிநாட்டினரை வரவேற்ற முதல் பிரிட்டிஷ் நகரம் என்ற பெயரைத் தட்டிச் செல்கிறது கிரீனிச்! லண்டன் மக்கள் இங்குள்ள ராயல் பார்க்கைத் தங்கள் பொழுதுபோக்கு இடமாக ஆக்கிக் கொண்டனர். கிரீனிச் பொருட்காட்சியைப் பார்க்க மக்கள் வெள்ளம் அலை மோதும்! இந்த மக்கள் வெள்ளத்தைப் பார்க்க பிரபல நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸ் பெரிதும் விரும்புவாராம்!

கிரீனிச்சின் இன்னொரு முக்கியமான பரிமாணம் அது சாமான்ய மக்களின் மீது காட்டிய பரிவு தான்! ராயல் நேவல் ஆஸ்பத்திரியை கட்ட ஐம்பது ஆண்டுகள் ஆகியது.ஜான் ஈவிலின் என்ற பொருளாளர் முதன் முதலில் பணம் சேர்த்து இதைக் கட்ட ஆரம்பித்தார்.

மீனவரின் விதவை மனைவிகளுக்கும் அனாதைகளுக்கும் இது பின்னால் புகலிடமாக ஆனது. இதைத் தொடர்ந்து ஏராளமான அனாதை ஆசிரமங்கள் இங்கு உருவாகத் தொடங்கின. க்வீன் எலிஸபெத் கல்லூரி என்ற பொது நல தர்ம நிறுவனம் வில்லியம் லம்பார்டு என்பவரால் நிறுவப்பட்டது. 1613ம் ஆண்டிலேயே ஏழைகளுக்காக "டிரினிடி' என்ற ஆஸ்பத்திரியை எர்ல் ஆஃப் நார்த் ஆம்ப்டன் நிறுவினார்.

உலகையே வரவேற்கத் துடிக்கும் இந்த நகரின் மனிதாபிமானத் தொண்டை அனைவரும் பாராட்டுவதில் வியப்பில்லை. இதனுடைய கட்டிடக் கலை நம்மை எவ்வளவு பிரமிக்க வைக்கிறதோ, அவ்வளவு பிரமிப்பை இதனுடைய வரவேற்பின் மூலம் இந்த நகரம் தர இருப்பதால் லட்சக்கணக்கான மக்கள் கிரீனிச்சிற்குச் சென்று மில்லென்னியத்தை வரவேற்கத் தயாராகின்றனர்!

http://kalviamuthu.blogspot.com

(1999ம் ஆண்டு வெளியான கட்டுரை)

# உப்பு உயிரைக் குடிக்கும்!

உப்பைப் பற்றிய வழிப்புணர்ச்சி சமீபகாலமாக இந்தியாவில் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்!

சாதாரண உப்புதானே என்று அலட்சியமாக இருக்கக்கூடாது. ஏனெனில் உப்பு உயிரைக் குடிக்கும். உப்பு உணவின் இன்றியமையாத அம்சங்களுள் ஒன்று; அது இல்லையேல் இறந்து விடுவோம். ஆனால் அதையே அதிக அளவு உட்கொள்ள ஆரம்பித்தோமானால் அது உடல் நலத்தை வெகுவாகப் பாதிக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன.

உப்பின் முக்கியமான அங்கமான சோடியம், 'ஹார்ட் அட்டாக்கை' யும் பக்கவாதத்தையும் ஏற்படுத்தும் அதிக இரத்த அழுத்தத்திற்கு வழி வகுக்கும் முக்கியமான காரணமாக ஆகிறது. இது மட்டுமல்ல; ஆஸ்துமா, சிறு நீரக வியாதிகள், வர்ம வியாதிகள் (Osteoporosis) இவற்றிற்கு அதிக உப்பே காரணம் என்று தெரிய வருகிறது. உலக உடல் நல நிறுவனம் (WHO) ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ஆறு கிராம் உப்பே உட்கொள்ளலாம் என்று பரிந்துரை செய்கிறது. அதாவது ஒரு டேபிள் ஸ்பூன் அளவுதான் இது!

ஆனால் ஆரோக்கியமாக வாழ ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ஒரு கிராம் உப்பே போதும் என்று ஊட்டச்சத்து வல்லுனர்கள் கூறுகிறார்கள். ஆனால் சாதாரணமாக பிரிட்டனிலும் இதர நாடுகளிலும், 9 கிராம் உப்பை அனைவரும் உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள். அது எப்படிச் சேர்கிறது என்பதை அறியாமலேயே அதை ஆர்வத்துடன் அனைவரும் சேர்த்துக் கொள்கிறோம். சாதாரணமாக ஒரு தயிர் சாதத்திலேயே எவ்வளவு உப்பு சேர்கிறது.

http://kalviamuthu.blogspot.com

உப்பிற்கு பதிலாக எலுமிச்சை சாறு, உப்புச் சத்துள்ள பொருட்கள் மற்றும் மூலிகைகளை உணவில் சேர்க்க முனைந்து இல்லத்தரசிகள் செயல்பட வேண்டும். குடும்ப ஆரோக்கியமே அவர்கள் கையில் தானே இருக்கிறது.

இதற்கிடையில் பிரிட்டனில் சென்ற அக்டோபரிலிருந்து ப்ரெட், பிஸ்கட் மற்றும் ரெடிமேட் பாக்கெட் உணவுகள் அனைத்திலும் 25 விழுக்காடு உப்பைக் குறைக்க வேண்டும் என்று அஸ்டா (ASDA) என்ற பிரிட்டனின் மிகப் பெரிய சூப்பர் மார்க்கெட் சங்கிலித்தொடர் நிறுவனம் தீர்மானிக்க அதன் 4000 உணவு வகைகளில் உப்பு குறைக்கப்படுகிறது. ஆகவே இந்த 1999-ம் ஆண்டில் தனது 66 லட்சம் வாடிக்கையாளர்களுக்கு உப்பைக் குறைப்பதன் மூலம் 500 டன் உப்பை அது உணவிலிருந்து நீக்குகிறது. குறைந்த பட்சம் 3,40,000 உயிர்களையாவது இந்த நடவடிக்கை காப்பாற்றும் என்கிறது அஸ்டா!

இதற்கிடையில் அஸ்டாவின் போட்டி சூப்பர் மார்க்கெட் நிறுவனமான செய்ன்ஸ்பரி தனது 2800 உணவு வகைகளில் 1994-ம் ஆண்டிலிருந்தே 25 விழுக்காடு உப்பு குறைக்கப்பட்டு விட்டதாகக் கூறுகிறது! இந்தியாவில் இதே விழிப்புணர்ச்சியோடு உப்பு அளவைக் குறைத்தால் எத்தனை ஆயிரம் உயிர்களின் சாவு தடுக்கப்படும்.

http://kalviamuthu.blogspot.com

# சாக்லெட், சாக்லெட்!

கோக்கா விதையிலிருந்து தயாரிக்கப்படுகிறது சாக்லெட், சாக்லெட் உருவாகக் காரணமாக இருக்கும் கோக் மரம் ஆப்பிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் ஆகிய இடங்களில் அதிகமாக உள்ளன. கோக்கா விதைகள் அரைக்கப்படும் போது சாக்லெட் பசையை போல உருவாகிறது. இதை சாக்லெட் மாஸ் என்பர்.

கோக்கா சாலிட், கோக்கா பட்டர் என்ற இந்த இரண்டும் இணைந்ததுதான் சாக்லெட் மாஸ்!

கோக்கா சாலிட்டை நசுக்கி சலித்தால் வருவது கோக்கா பவுடர். கோக்கா பட்டர் சாக்லெட்டிற்கு இளகும் தன்மையைத் தருகிறது.

75 சதவிகிதம் கோக்கா சாலிட் இருந்தால் அது நல்ல சாக்லேட். இப்போது ஃபாரின் சாக்லெட் ஏராளமாகக் கிடைக்கிறது. வாங்குவார் இதைப் பார்த்து வாங்க வேண்டும்.

ஒரு சாக்லெட்டில் 20 சதவிதம்தான் கோக்கா சாலிட் இருக்கிறது என்றால் மற்ற 80 சதவிதம் வேறு எந்த பொருள்களோ இருக்கின்றன என்று அர்த்தம். வெஜிடபிள் கொழுப்பு, வெண்ணெய், வாசனைப் பொருட்கள், எமல்ஸிபயர் என்று இப்படி பட்டியல் நீளும். இப்படி மற்ற பொருட்கள் எண்பது சதவிதம் வரை சேர்க்கப்படு வதற்கான காரணம் சாக்லெட்டின் விலைதான். கூடுதலாக கோக்கா சாலிட் இருக்க இருக்க கூடுதலாக விலை தர வேண்டி சர்க்கரை, கொழுப்பு ஆகியவை கலந்து இருக்கும் ஒரு நல்ல சாக்லெட்டை எப்படிக் கண்டு பிடிப்பது? அது உடைபடும்போது ஏற்படும் சத்தத்தை வைத்துக் கண்டு பிடித்து விடலாம். கடுக்கென்ற சத்தத்துடன் உடைபட்டால் அது மிக நல்ல சாக்லெட். அத்தோடு உடைபட்ட இரு பகுதிகளும் ஷார்ப்பா இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் இருந்தால் அது நல்ல சாக்லெட், சத்தமே இல்லாமல் உடைந்து உடைபட்ட முனைகள் மழுமழுப்பாக இருந்தால் அவ்வளவு நல்ல சாக்லெட் என்று கூற முடியாது.

http://kalviamuthu.blogspot.com

சாக்லெட் விரும்பிகள் இனி நல்ல சாக்லெட்டை உடைத்துப் பார்த்து வாங்க வேண்டும். பல்க் பர்சேஸ் செய்யும் போது ஒன்றை உடைத்து டெஸ்ட் செய்து பிறகு வாங்கலாமே. நமது பிராண்ட் சாக்லெட்டை தேர்ந்தெடுப்பதற்கும் இது தான் வழி.

# ஆசிரியர் குறிப்பு

திரு ச.நாகராஜன் பாரம்பரிய மிக்க தேசபக்த குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் திரு வெ.சந்தானம் இந்திய சுதந்திரப் போரிலே ஈடுபட்டுச் சிறை சென்றவர். மணிக்கொடி பி.எஸ்.ராமையாவுடன் இணைந்து தமிழ் பத்திரிக்கை உலகில் ஒரு புது சகாப்தத்தை ஏற்படுத்தியவர். தஞ்சை மாவட்டம் கீவளூரில் பிறந்த நாகராஜன், இது வரை சுமார் 1200க்கும் மேற்பட்ட கதைகள், கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார். அறிவியல் விண்வெளி விஞ்ஞானம், ஜோதிடம், நட்சத்திரங்கள், வரலாறு, இலக்கியம், சுற்றுலா இடங்கள், புலன் கடந்த உணர்வு, கடல் வளம், மிருக இயல், இசை, மந்திரம், இயந்திரம், சாதனையாளர்கள், ஹாலிவுட் சினிமா, பெண்கள் முன்னேற்றம், சுய முன்னேற்றம், படைப்பாற்றல் உள்ளிட்ட பல பொருள்களிலும் கட்டுரை படைத்திருப்பது இவரது தனிச் சிறப்பு! திருச்சி வானொலி நிலையம் வாயிலாக இவரது நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. ரேடியோவில் அவ்வப்பொழுது உரை ஆற்றி வருகிறார். ஜெயா டி.வியில் ஒளிபரப்பாகும் இவரது நிகழ்ச்சிகள் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளன. இதுவரை இவரது 14 புத்தகங்கள் வெளி வந்துள்ளன. மேலும் பல அச்சில் உள்ளன. இவரது படைப்புகள் பாக்யா, மங்கையர் மலர், தினமணி, தினபூமி, ஆனந்த விகடன், சினேகிதி, ஞான ஆலயம், கோகுலம் கதிர், ஹிந்து, மஞ்சரி, கலைமகள் உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் இடம் பெறுகின்றன. இணைய தள இதழ்களில் நிலாச்சாரலில் இவரது படைப்புகளைக் காணலாம். வாகனக் கட்டுமான இயல் எனப்படும் வெஹிகில் பாடி எஞ்சினியரிங் தொழில் வல்லுனர் இவர்! மனைவி மற்றும் இரு மகன்களுடன் சென்னையில் வசித்து வருகிறார்.

http://kalviamuthu.blogspot.com